
# ஞானசம்பந்த

மலர் 11] நந்தன ஆடி மீ 10—8—52. [இதழ் 9


தருமபுர ஆதீன மடாலயத்தில்



ஆதீனக் கல்விநிலைய ஹரிஜன மாணவர்கள்
நாடோறும் உணவுபெறுகிருர்கள்.


ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.

உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீ

தருமபுர ஆதீன வெளியீடு.

# திருக்குறள் - உரைவளம்

## காமத்துப்பால்.

ஏனைய பால்களைப்போலவே உரைப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, முதுமொழிவெண்பாக்கள், ஆகிய ஐந்து பிரிவுகளில் உரைவளம் தொகுக்கப் பெற்றுள்ளது.

தொகுப்பாசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் 51 தலைப்புகளில் ஓர் அரிய பெரிய நூலாராய்ச்சி எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது.

M. O. மூலம் பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரெளன் 1×4 சைஸ் பக்கம் 520

காலிகோ கட்டடம் விலை ரூ. 6—0—0

தபால்கூலி வகையரு 1—0—0

கிடைக்குமிடம்:

மானேஜர்,

தருமபுர ஆதீனம்.

தருமபுரம், மாயூரம் P. O.

தஞ்சாவூர் ஜில்லா.

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

# சுதந்திர தின ஆசி

சுதந்திரம் என்பது பொறுப்புணர்ச்சி. பொறுப்புள்ள மனிதன் கடமையில் தவறான். உழைப்பு அவனுக்கு ஒரு விருந்து. மக்களின் உழைப்பெல்லாம் சுதந்திரநாட்டின் செல்வம். உழைப்பு உருவாகத் தளராத மனம் தேவை. தளராதமனம் தெய்வ நம்பிக்கையொன்றால்தான் உண்டாகும். கடவுளை நம்புங்கள்; கடமையைச் செய்யுங்கள். தனக்கெனவாழாப் பிறர்க்கு உரியராகுங்கள். என்றும் இன்பமாக வாழலாம்.

தருமபுர ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு:



சென்னை ஸ்ரீ சென்னமல்லீஸ்வரர்கோயிலில் நடந்தபோது எடுத்த படம்.

தருமபுர ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு :



திருவல்லிக்கேணி தேசீய பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடந்த
மாதர் மாநாட்டுப் பகுதி,

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11] நந்தன ஆடி 10—8—52. [இதழ் 9

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## நன்றி செலுத்துகிறோம்!

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு சென்னையில் சிறப்பாக நடந்தது. தக்க அறிஞர்கள் தலைமை தாங்கினார்கள். மிகஅருமையான சொற்பொழிவுகள் செய்தார்கள். திருமுறை விழாவும் பிரசாரவாகன ஆண்டுவிழாவும் ஸ்ரீ கபாலீஸ்வரர் அருளால் நடைபெற்றது. இதனைப்பற்றி எல்லாப்பத்திரிகைகளின் ஆதரவும் பொதுஜனங்களுடைய ஆதரவும் தக்கமுறையில் இருந்தன. இப்படி ஆதரித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்கிபத்திரிகை சென்னையில் கூட்டவேண்டிய அவசியத்தைப் பற்றி ஏதோ சில வார்த்தைகள் எழுதியிருக்கிறது. அதில் ஒரு பகுதி மாநாடும் பிரசாரமும் தேவை என்கிறது. ஒருபகுதி பட்டினத்தில் தேவையா? என்கிறது. அந்தமட்டில் விடவில்லை; கிராமங்களில் பலியாமையால் பட்டினத்திற்கு வந்துவிட்டதாகச் சொல்லுகிறது. இந்த நிலைமையை நேயர்கள் அறிந்து கொள்வதற்காகச் சில வரலாறுகளை நினைவூட்டுகிறோம்.

தமிழ்நாட்டிற்குச் சென்னை தலைநகரம். அத்தலைநகரத்தி லிருப்பவர்கள் எல்லோருமே பெரிய பெரிய அறிவாளிகள். அங்கே இருப்பவர்கள் பெரும்பாலோர் மனஉழைப்பு உடைய வர்கள். அங்கேயே கம்யூனிசம் மிகுந்திருப்பது என்பதை கிராமாந்தரத்திலிருக்கும் நாம் எடுத்துக் காட்டவேண்டிய அவசியமில்லை. சட்டசபை முதற்கொண்டு சந்திக்கடை வரையில் கம்யூனிஸப்புயல் மனிதனைத் தலைநீட்டாதவாறு சிண்டைப் பிய்க்கிறது. தெய்வ சிந்தனைக்கு இடமில்லா வாறு, வயிறு வளர்க்க அலுவலகம் பறித்துக்கொண்டது போகப் பாக்கிநேரத்தைச் சினிமாக்களும் களியாட்டங்களும் கவர்ந்து கொள்கின்றன. இப்படிப்பட்ட இடத்திலே மதப் பிரசாரங்கள் கிளம்பினால் அதில் என்ன தவறு இருக்கிறது? கனம் ராஜாஜி அவர்கள் தன்னை ஒரு துடைப்பம் என்று சொல்லிக்கொண்டார். அதன் காரணத்தையும் அழகாக விளக்கிக்காட்டினார். அதுபோல மூலையிற்கண்ட கோளாறை நீக்குவதற்காகவே இதற்கு முன் பலமுறையும் வந்திருப்பது போல இந்தத்தடவையும் வந்தது ஆதீனம்.

ஆதீனப் பிரசாரக்குழு இந்த ஆண்டில்மட்டும் கோயம் புத்தூர், சேலம், திருச்சினாப்பள்ளி, மதுரை, இராமனாதபுரம் ஜில்லாக்களில் மூலைமுடுக்குகளிலெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறது. அது நல்ல பலனை அளித்து வந்திருப்பதை ஆங்காங்கும் உள்ள அறிவாளிகள் பேசியும், எழுதியும் இருக்கிறார்கள். ஆனால் பட்டினத்து அறிவாளிகள் சிலருக்கு ஆதீனப் பிரசாரச் செய்தி எட்டவில்லை போலும். அப்படி எட்டியிருந்தாலும் காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாய்த் தோன்றுவதுபோல, உண்மை புலப்படாமற் போகிறது. பாவம்.

மற்றொன்றை ஞாபகப் படுத்துகிறோம். தருமபுர ஆதீனம் இருக்கிற மாயூரம் தாலூகாவிலேயே – தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த தேவஸ்தான இடங்களிலேயே, ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்து (1255) பிரசாரங்கள் நடைபெற்றுள்ளன. அவை நடந்த பிறகு சரியான பலன் ஏற்பட்டிருக்கிறதா என்பதை நாங்கள் அவ்வப்போது அறிந்துதான் வருகிறோம்.

உழவர்களின் நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப் படுகின்றன என்ற கிண்டல் பேச்சும் எழுத்துந்தான் கம்யூனிஸத்தை வளர்க்கின்றன. உழவர்கள் வருந்துகிறார்கள்.

அவ்வப்போது ஆதீனத்தில் செய்யும் சமயப்பிரசாரம் எவ்வளவு பலனளித்திருக்கிறது என்பதை நாங்கள் நாடி பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். உண்மையில் உழவர்கள் தெய்வ பக்தி உடையவர்களாக இருக்கிறார்கள். பிரசாரங்களும் நல்ல பயனைத்தருகின்றன. ஓர் தனிப்பட்ட முதலாளி உழவனுக்குச் செய்கின்ற நன்மையைக் காட்டிலும், மடாலயங்கள் அதிக மாகச் செய்கின்றன என்பது வெறும் வாய்ப்பேச்சுமட்டும் அல்ல. தேவையான காலங்களில் மடாதிபதிகளின் சார்பாக விட்ட அறிக்கைகளும், மடாலயக் கணக்குகளுமே சான்று பகரும். ஆதீன கர்த்தர்கள் அரசாங்கச் சட்டம் இடந் தருகிற வரையில் உழவர்களுக்கு உதவி செய்தே வந்திருக் கின்றார்கள் என்பதை அறிவாளிகள் நன்றாகத் தெரிந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

பொதுவாக எல்லாக் கிராமங்களின் நிலையும் அரசியல் வாழ்வுத் தேர்வு காலங்களில் சீர்கேடுற்றதன் காரணத்தை வெறும் பட்டினவாசிகள் அறியமாட்டார்கள். படுக்கையை விட்டு விடியற்காலையில் எழுந்தவுடன் பத்திரிகையை அரை விழிப்போடு அங்குமிங்கும் புரட்டிப்பார்க்கும் அறிவாளிகள் அறியமாட்டார்கள். கிராமமக்களோடும், பட்டினத்து மக்க ளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கட்குத்தான் தெரியும், அப்படித்தெரிந்துகொண்ட ஒன்றுதான் கிராமங் களின் சீர்கேடு. அவ்வளவுக்கும் பட்டினத்திலிருந்து வரும் பத்திரிகைச் செய்திகளும், பட்டினத்துச் சூழ்நிலையுமே காரணம் என்பது இந்த மூன்றாண்டில் 6000மைல் அலைந்து சற்றேறக்குறைய 2000 கிராமமக்களோடு தொடர்பு கொண்டதால் விளைந்த உணர்ச்சியே கிராமங்களாகிய உறுப்புக்கள் ஏன் சோர்வு அடைகின்றன என்பதை ஆராய எழுந்தஎழுச்சி. அதனாலேயே மூளைத்தானமாகிய சென்னையில் பிரசாரம் செய்ய ஆதீனப்பிரசாரகோஷ்டி வந்தது.

சமய ஸ்தாபனங்கள் அரசியல் தொடர்பில்லாமல் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவு செய்கின்றது. நோய் முதல் நாடித்தான் அது தணிக்கும்வாய் நாடவேண்டும் என்று வள்ளுவர் கூறினார், சமயம் சம்பந்தப்பட்டமட்டில் இவ் வளவுதான் அநுபவ சாத்தியமாகச் செய்யக்கூடியது. அதற்கு மேற்பட்டவை அரசியல் ஸ்தாபனங்கள் செய்ய வேண்டியவை. அவற்றைப் பரப்பிவரும் பத்திரிகைகளின் முழுநோக்கமும் அதுவாகவே இருத்தல்வேண்டும்.

அதோடுகூட தமிழ்ப்பெருந் தனிநூலாகிய திருக்குறள் காமத்துப்பால் உரைவள முடிவுவிழா திருவள்ளுவர் பாத மூலத்திலே நடக்கவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தது. பிரசாரவாகனத் தொடக்கவிழாவை, எந்த கபாலீஸ்வரர் சந்நிதியிலிருந்து 1948-ம் ஆண்டு ஆரம்பித்ததோ—சாதாரண பிரசாரக் கூட்டங்களில் பலவற்றை 49, 50, 51 ஆண்டுகளில் நடந்ததோ அந்த இடத்திலேயே அவருடைய அருளினுலே நான்காண்டு நன்ருக நடைபெற்ற பிரசாரத்தின் சிறப்பை—அவர் திருமுன்பே அறிவித்துக்கொள்ளும் நன்றியின் சிறப்பையும் உணர்ந்தது. சென்னேயை நாடிற்று. பல அறிஞர்கள், தூய்மையான அறிவாளிகள், தன்னலமற்ற பெரியார்கள், விருப்பு வெறுப்பற்ற மகான்கள் இதில் பங்கு கொண்டார்கள். கற்பகாம்பிகையின் கருணேமழையோடு விழா வெற்றியாக நடைபெற்றது. உலகம் அம்மழையை விரும்பும்போது அம்மழைக்கு அஞ்சும் சிலர் சென்னேயைக் காட்டிலும் கிராமம் நல்லதென்று உபதேசிக்க முன்வரலாம். ஆதீனம் தாம் செய்துவரும் பிரசாரப்பணிகளேயும் – அவற்றின் பயனேயும்தெரிவிக்கும் அறிக்கைகளே ஆதாரங்களுடன் அந்தந்த ஆண்டிலும் வெளியிட்டிருக்கிறது. எல்லாபத்திரிக்கைகளின் பார்வைக்குங்கூட அனுப்பியிருக்கிறது. இந்த ஆண்டும் அப்படியே செய்திருக்கிறது.

கிராமங்களில்மட்டும் அன்றி, சேரிகளிலும் சென்று பிரசாரத் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கும் கோஷ்டியார் கிராமங்களேத் திருத்த சென்னேயைத்தான் திருத்தவேண்டும் என்று கண்டுதான் இப்பணியில் இறங்கினுர்கள்.

'நாட்டில் ஆஸ்திகம் வளர்ந்தோங்க இத்தகைய சமயப் பிரசாரம் சென்னேயில் சிறப்பாகத்தேவை' என்று கனம் V. C. பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் கூறினுர்கள். கனம் J. சிவசண்முகம் பிள்ளேயவர்கள் 'கள்ளுக் குடிக்கவேண்டும் என்பதற்கு திருக்குறளே ஆதாரங்காட்டும் இந்நகர வாசிகட்கு இத்தகைய பிரசாரம் மிக அவசியம்' எனக் கூறினுர்கள். கனம் ஜட்ஜ், கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 'மக்களின் அறியாமையைப் போக்கி மதத்தில் ஈடும்பபடியாகச் சென்னேயில் பிரசாரம் செய்யவேண்டியது மிகஅவசியம்' என வற்புறுத்தினுர்கள்.

---

43ஃ

தருமபுர ஆதீனம்

## ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

## சீகாழியில் 13—7—52ல்

## ஞானசம்பந்தர் கழகத்தைத் தொடங்கிவைத்தபோது அருளிய

# ஆசியுரை.

---

சிவம்பெருக்கும்நாடு செந்தமிழ்நாடு. அதில் தென்னாடு மிகச் சிறந்துவிளங்குகிறது. எங்குபார்த்தாலும் ஆலயங்கள்; ஆலயங்கள் இல்லாத இடமே இராது. ஆலயங்கள் யாவும் தெய்வநெறியை வளர்த்துவருவதோடு கலைவளர்ச்சியையும் காட்டிக்கொண்டிருக்கின்றன. அத்தகைய ஆலயங்களுள் இதுவும் ஒன்று. ஒன்றற்குத்தானே தனிச்சிறப்பு இருக்க முடியும். ஒருவன் ஏகன் என்றெல்லாம் இறைவன் குறிக்கப் படுகிறான். அதற்கு என்னபொருள். ஒப்பிலாதவன் ஒருவன். ஆகவே இத்தலத்திற்கும் தனிச்சிறப்பு இருக்கவேண்டும் அல்லவா? இப்பொழுது உங்கள் சிந்தனையை 1300 வருடங் களுக்குமுன் கண்ட காட்சியில் செலுத்திப்பாருங்கள்.

இத்தலத்தில் நீர்வளம் நிலவளம் மிக்கிருந்தது. எங்கு பார்த்தாலும் சோலை; இடையிடையே குளங்கள்; வயல்களில் செந்தாமரைகள்; வயலருகேயுள்ள மாமரங்களில் மாம்பழங் கள் தாமாகவே கனிந்ததால் சாறு ஒழுகிக்கொண்டிருக்கும். அதுவும் முதலில் மாவிலையில் விழுந்து பிறகு அதன் நுனி வழியாக ஒழுகிக்கொண்டிருக்குமாம். அச்சாறு தாமரையில் விழுகின்றது. இதனை அன்று கண்ட சேக்கிழார் சிந்தை எவ்வாறு கருதுகிறது? வயல் யாகசாலை; தாமரை யாகசாலை யில் விளங்கும் அக்கினி; பழச்சாறு நெய்; மாவிலை ஸ்ருக்கு ஸ்ருவங்கள்; மாமரங்கள் யாகஞ்செய்யும் ஆசாரியர்கள்; கிளைகள் அவர்களின் கைகள். ஒன்றற்கொன்று இயைபு எப்படியிருக்கிறது?

பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்து மதுநறுநெய்
நிரந்தரம்நீள் இலைக்கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும் ஆகுதிவேட்கும் தகையஎன மணந்துளதால்.

இதுமட்டுமா? வேதியர்கள் முந்நூலணிந்து கண்ணீர்வாரச் சாமகீதம் பாடும் காட்சியினையும், தாமரைகள் தம்மிடத்துள்ள நூலினாலும் தேனுண்ணவரும் வண்டுக் கூட்டங்களின் ஒலியினாலும் நமக்குக் காட்டுகின்றனவாம். இது பற்றியேதான் சேக்கிழார் எடுத்த எடுப்பிலேயே "சராசரங்களெலாம் சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்றருளியிருக்கின்றார். இவ்வாறு பிள்ளையார் அவதரித்த சிறப்பு இத்தலத்திற்குத்தானே உரியது. இத்தலத்தில் வசிக்கும் பேறுபெற்ற நீங்கள் எவ்வளவு புண்ணியசாலிகள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

சிவம்பெருக்கும்பிள்ளையார் அவதரித்து மூன்றாண்டுகள் ஆயின. அந்த மூன்றுவயதிலும் குழந்தை அடிக்கடி அழுது கொண்டுதானே இருந்திருக்கும். ஆனாலும் மூன்றாவது வயதிலே அழுதது சிறந்ததாக விளங்கிற்று. ஏன்? அதுவே வேதநெறி தழைத்தோங்க ஏதுவாயிற்று; மிகுசைவத் துறை விளங்க ஏதுவாயிற்று; பூத பரம்பரைபொலிய ஏதுவாயிற்று. அம்மே! அப்பா! என்று அழுத உடனே தோணியப்பர் ஆணைப்படி அம்மையார் திருமுலைப்பாலில் சிவஞானங் குழைத்து உண்பித்தார். குழந்தை சிவஞானக்குழந்தையாக ஆகியது. சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் கைகூடிற்று. எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும், அப்பொருள்தான் ஆளுடைய அடியார்கள் எனும் அறிவும்முந்த எழுந்தார். இக்கருத்துக்களையெல்லாம் அடக்கி,

வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்.

என்று முதனூல்சுருக்கிக்கூறுகிறது. (இதனையே சேக்கிழாரும் "பண்டுதிருவடி மறவாப்பான்மையோர்" என்கிறார்.) அடுத்து வகைநூல் என்னகூறுகிறது என்பதையும் பார்க்கவேண்டும். ஞானசம்பந்தர் அம்மையின் அருள்பெற்றார்; பாடினார். ஏன்? "வையம்மகிழ யாம்வாழ அமணர் வலிதொலைய" என்கிறார் நம்பியாண்டார்நம்பிகள். இத்தொடரை விரித்துக் கூறுகிறது பெரியபுராணமாகிய விரிநூல். எப்படி? வையம் மகிழ பூதபரம்பரை பொலிவுறும்; யாம்வாழ சைவத்துறை விளங்கும்; அமணர் வலிதொலைய வேதநெறி தழைத்தோங்கும். ஆகவேதான் சேக்கிழார்,

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுதார்.

என்கிறார். அழுத இடம் எது? இவ்வாலயத்திலுள்ள பிரம தீர்த்தக்கரையில்தானே. கரையில் நின்று அழுது பாலுண்டு ஓய்ந்த பிள்ளையார் செய்த அற்புதம் என்ன?

இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று குறித்துச் சொல்லிக் காட்டமுடியாத பெருமானைச் சுட்டிக் காட்டுகின்றார் தந்தையாருக்கு. ஞானப்பால் ஞானப்பாடலாக வெளிவருகின்றது. "மாநிலத்தோர்க்கு உரைசிறப்பப் பல்லுயிரும் களிகூறத் தம்பாடலைப் பாடினார்" என்கிறார் சேக்கிழார். அப்பர் சரித்திரத்திலும்கூட "கூற்றாயினவாறு விலக்ககிலீர் எனநீடிய கோதில் திருப்பதிகம், போற்றாலுலகேழின் வருந் துயரம் போமாறு எதிர்நின்று புகன்றனரால்" என்று குறிப்பிடுகின்றார். ஆகவே அவர்கள் பதிகங்களெல்லாம் அருளியது தமக்காக அன்று; மக்கள் உய்யவேண்டும்; துன்பம் நீங்கவேண்டும் என்ற குறிக்கோள்பற்றியேயாம். ஞாலம் உய்ந்திடத்தானே அவர் ஞானமுண்டருளியது. அவர்கள் செய்கின்றவைகள் ஒவ்வொன்றும் தம்பொருட்டன்று. அது மட்டுமல்ல; சிவப்பணியோடு சீவப்பணியும் செய்கின்றவர்கள். ஓர் உதாரணம் பார்ப்போம்.

பிள்ளையார் திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை, நாகை முதலாகிய தலங்களை வணங்கிக்கொண்டு திருமருகலுக்கு வருகின்றார். இவர் செய்யவேண்டியது எது? ஆலயவழிபாடு தானே; ஆலயவழிபாடு செய்வோர் நேரே ஆலயத்திற்குத் தானே செல்லவேண்டும். அந்த ஊரில் நடக்கின்ற நன்மை தீமைகளைக் கவனித்து அதற்குப் பரிகாரம்தேடவேண்டிய கவலை அவர்களுக்கு இருக்காதல்லவா? பிள்ளையார்வழிபாடு எப்படி இருக்கிறது பாருங்கள். பிள்ளையார் ஆலயத்தருகே வருகின்றார். ஏதோ அழுகையின் ஒலி காதைத்துளைக்கிறது. பெருமானே! காப்பாற்றமாட்டாயா என்கிற சத்தம் உண்டாகின்றது. செவி ஏற்ற பிள்ளையார் 'நமக்கென்ன; நாம்வந்த வேலை என்ன; அழுகின்ற இடத்திற்கு நாம் ஏன் போக வேண்டும்; பிறப்பும் இறப்பும் உலக இயற்கைதானே; நாம் வழிபாடு முடித்து அடுத்த ஊருக்குச் சென்றுவிடுவோம்' என்று எண்ணினரா? இல்லை. சிவசிந்தனையோடுவருகின்ற அந்தச் சத்தம் கேட்டவுடன் சத்தம் வருமிடம் நோக்கிச் சென்றார். அழுகின்றபெண் இருக்கும் மடத்தை அடைந்தார்; பெண்ணின் துயரத்தை நேரேகண்டார்; வரலாற்றைக்கேட்டுத் தெரிந்துகொண்டார். 'பயப்படாதே' என்று அபயம் கொடுத்தார். பாம்பணையில் துயில்கொள்ளும் திருமாலும் வணங்கும் பெருமானே! பாம்பினால் விளைந்த இப்பெண்ணின் துன்பத்தை நீர்தானே போக்கியருளவேண்டும்; எவ்வுயிர்க்கும் தந்தைதாய் நீயல்லவோ! என்று பெருமானிடம் விண்ணப்பித்துப் பதிகம் பாடினர். பாம்புகடித்து இறந்த வணிகனும் உயிர்பெற்றெழுந்தான்.

இனித் திருவீழிமிழலை நிகழ்ச்சியினையும் சிந்தித்துப் பாருங்கள். சம்பந்தரும் அப்பரும் அடியார் கூட்டங்களோடு அங்குத் தங்கியிருக்கின்றார்கள். அந்நாளில் அங்கு பஞ்சம் வந்துவிட்டது. மழை பெய்யவில்லை; ஆறுகளில் நீரில்லை; அதனாலே விளையுள் இல்லை. உணவு இன்மையாலே உயிர்கள் வாடுகின்றன. இந்நிலையில் நாம் என்னசெய்வோம். பஞ்சம் இல்லாத ஊருக்குப் புறப்பட்டுப்போய் தங்கிவிடுவோம். ஏழை எளியவர்களைப்பற்றிய கவலையே நம்மவர்களுக்கு இராது.

ஆசாரியமூர்த்திகள் அப்படி இருந்தார்களா? அடுத்த ஊருக்குச் சென்றுவிட்டார்களா? இல்லை. எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் மோனத்தேதானே இருக்கும். ஆகவே இறைவனிடம் விண்ணப்பித்தார்கள். பெருமான் படிக்காசு கொடுத்தார். காசுகொண்ட பெருமக்கள் தங்கள் தங்கள் திருமடத்தில் விருந்தளித்தார்கள். பஞ்சகாலத்தில் விருந்தென்றால் கூட்டத்திற்குக் குறைவு ஏது? கூட்டம் கூட்டமாகவந்து விருந்துண்டார்கள். உணவு அதிகமாக உண்போர் குறைவாக வருதலின் 'யாவரும் திருமடத்திற்கு விருந்துண்ண வருக! வருக!!' என்று பறையறைவித்தார்களாம். பாருங்கள் பஞ்சம் எப்படிப் பறந்தோடுகின்றது என்று,

> நாதர்விரும் படியார்கள் நாளும் நாளும்
> நல்விருந்தாய் உண்பதற்கு வருகஎன்று
> தீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர்
> திருவமுது கறிநெய்பால் தயிர்என்றின்ன
> ஏதமுறு தினிதுண்ண ஊட்டி அங்கண்
> இருதிறத்துப் பெருந்தவரும் இருந்தநாளில்.

என்கிறார் சேக்கிழார்பெருமான். இனி மற்றொரு நிகழ்ச்சியையும் பார்ப்போம்.

அடியார்கள் இன்பம் வருங்கால் மகிழ்வும் துன்பம் வருங்கால் வருத்தமும் கொள்ளார். வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் இறைவன்; அவனடி சார்ந்தோரும் அப்படித்தானே இருப்பார்கள்; அவர்களுக்கு இடர் ஏது? எல்லாவற்றையும் இறைவனின் அருளால் வந்ததாகவே கருதுவார்கள். குங்குலியக்கலயர் தம் மனைவியின் கழுத்திலுள்ள மங்கலப்பொருளையும் ஒருநாள் விற்றுத் தூபப்பணி செய்தார். கருணைக்கடவுள் மனமிரங்கி அவரது இல்லத்தில் பொன் குவியல், நெல் குவியல் எல்லாம் நிரப்பிவிட்டார். கனவிலும் சொன்னார். எழுந்தார் நாயனாரின் அம்மையார்; செல்வம் கண்ட தரித்திரர்கள் எவ்வாறு மனமகிழ்வார்கள். அந்த மகிழ்ச்சி இந்த அம்மையாருக்கு வந்ததா. இல்லை! இது

எம்பிரான் அருள்என எண்ணினர்; இருகைகளையும் குவித்துப் போற்றினர். கோயிலுக்குத் தூயப்பணிசெய்யச் சென்ற நாயனர் இறைவன் சொல்லியபடி வீட்டிற்குவந்து 'இது என்ன ?' என்று ஆச்சர்யத்தோடு கேட்டபோதுங்கூட அந்த அம்மையார் 'அல்லொத்த கண்டன் எம்மான் அருள் தர வந்தது' என்று பதிலளித்தார். இதே கருத்துதான் ஞானசம்பந்தர் வரலாற்றிலும் ஓரிடத்தில் காணப்படுகிறது. அதையும் சிந்திக்கவேண்டும். அவர்கள் வாழ்க்கையே நமக்கு வழிகாட்டிகள்.

ஞானசம்பந்தர் தலயாத்திரை செய்தபோது அடியார் கூட்டங்களோடு நடந்துதான் போனர். திருத்தூங்கானை மாடம் பணிந்து திருவரத்துறை நோக்கிப் புறப்பட்டுப் போகின்றார். மாறன்பாடியை யடைந்தவுடன் களைப்பு ஏற்பட்டது. பஞ்சாக்ஷரசெபம் செய்துகொண்டு அங்கேயே தங்கி விட்டார். பிள்ளைத்துன்பம் பெருமானின் திருவுள்ளத்தை வாட்டியது. அந்தணர்கள் மூலம் அரத்துறைநாதர் சிவிகை, குடை, சின்னம் முதலியவற்றைக் கொடுத்தனுப்பினர். அவர்களும் கொண்டுவந்து பிள்ளையாரிடம் சேர்ப்பித்தார்கள். 'இதுவும் அரத்துறை அடிகள்தம் அருளே' என்று எண்ணிய பிள்ளையார் திருவாயினின்றும் திருப்பாடல் வெளிவருகிறது. ஒவ்வொரு பாடலிலும் அருளைவியக்கின்றார். சிவிகையிலுள்ள முத்துக்கள் வெள்ளொளியை வீசுவதால் அதனை வெண்ணீற்றொளியாகக் காண்கின்றார்; போற்றுகின்றார். உவர்நீர் படிதலால் உடல் வெளுத்துத் தம்முன்வந்துகொண்டிருந்த வண்ணானைக் கண்ட சேரமன்னர், அவனை வணங்கி 'வார வேடம் நினைப்பித்தீர் வருந்ாது ஏகும்' என்று தானே சொன்னர். எப்பொருளைக்கண்டாலும் சிவமாக - சிவசம்பந்த முள்ள பொருளாகக் காண்பதுதானே பெரியோர் இயல்பு.

இனி அடுத்தபடி பிள்ளையார் வரலாற்றைக் கவனிப்போம். வெண்ணீற்றொளியைப் போற்றிய ஞானசம்பந்தப் பெருந்தகை ஐந்தெழுத்தோதிச் சிவிகையை வலம் வந்து பணிகின்றார். பிறகுதான் ஆரோகணிக்கின்றார். அதுவும்

தனக்காகவா! அன்று உலகம் உய்தற்காக. அப்பாடலைப் பாருங்கள். சேக்கிழார்பெருமான் சொல்லுகிறார்,

சோதி முத்தின் சிவிகை சூழ்வந்து, பார்
மீது தாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றி, நின்(று)
ஆதியார் அருள் ஆதலின் அஞ்செழுத்(து)
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்.

இப்பாடல் புராணத்திற்கே நடுநாயகமான பாடல், உலகெலாம் என்று தொடங்குவாயாக என்று அம்பலக்கூத்தன் அருளிய அம்மெய்மொழியை அமைத்துப் போற்றிய இடம் இது.

பிள்ளையார் ஐந்தெழுத்தை ஓதிச் சிவிகையில் ஏறியது போல அப்பர் சுவாமிகள் அமணர்களால் கடலில் தள்ளப் பட்டபோதும் 'எப்பரிசாயினும் ஆக எந்தையை ஏத்துவன் என்ற' உறுதியுடையவராய் சிவனஞ்செழுத்தும் ஓதித் துதித்தார். நலமிகக்கொடுப்பதும், நடுக்கத்தைக்கெடுப்பதும் அந்த மந்திரந்தானே. ஆதலினால்தான் 'நற்றமிழ்மாலையா நமச்சிவாய என்று, அற்றமுன் காக்கும் அஞ்செழுத்தை அன்பொடு பற்றிய உணர்வினால்' பதிகமாகப் பாடினார். உடனே கருங்கல் தெப்பமாக மிதந்தது. கட்டிய கயிறும் அறுந்தது. பெருமானும் தெப்பத்தின்மீது எழுந்தருளினார்.

ஆகாயவீதியில் வெள்ளானைமீது ஏறிச் சென்ற சுந்தரர்பெருமானைக்கண்ட அவர்தோழர் சேரமான்பெருமாள் என்னசெய்தார்? பக்கத்தில் நின்றுகொண்டிருந்த குதிரைமீது ஏறினார். அதன் செவியில் சிவமூலமந்திரத்தை ஓதினார். அவ்வளவுதான். குதிரையும் பறந்து யானைக்குமுன்சென்றது. ஆனாயநாயனார் வேய்ங்குழலில் இம் மந்திரத்தையே ஒலியாக எழுப்பினார். கண்ணொளியிழந்தும் இறைபணியில் தவறாது நின்ற தண்டியடிகள் சிவனருளால் கண்ணொளி பெறுவேன் என்று சமணர்கள்முன் சபதம் செய்துகொண்டு கமலாலயத் தில் மூழ்கியபோதுங்கூட அஞ்செழுத்தோதியே மூழ்கினார். இப்படியாகப் பெரியோர்கள் எதைச்செய்தாலும் சிவச்

செயலாகவே செய்துவந்தார்கள்; அச்செயலும் தம்பொருட்டன்று; உலகமுய்யவே.

மதுரையில் பிள்ளையார் சமணர்களோடு வாதாடுகின்றார். அனல்வாதத்தில் வெற்றிகண்டார். அடுத்தது புனல்வாதம். அப்பொழுதுபாடிய திருப்பதிகத்தில் ஒரு பாசுரம். எடுத்த எடுப்பிலேயே வாழ்த்து கூறுகிறார். முதலில் அந்தணர் வாழ்க. அடுத்தது வானவர், ஆனினம். வானம் வறக்குமேல் சிறப்பொடு பூசனை செல்லாது என்கிறாரே வள்ளுவர். ஆகவே மழைவேண்டும். 'வீழ்க தண்புனல்' செங்கோன்மைவேண்டும் மழைக்கு, 'வேந்தனும் ஓங்குக.' பிறகு என்னசொல்லுகிறார். தீயனவெல்லாம் ஒழியவேண்டுமாம். 'ஆழ்க தீயதெல்லாம்.' அடுத்தபடி 'எல்லாம் அரன்நாமமே சூழ்க' என்கிறார். கடைசியாகப் பாசுரத்தை எப்படிமுடிக்கிறார் பிள்ளையார்? 'வையகமும் துயர் தீர்கவே' என்பதுதான் முடிந்த முடிபு. உலகம் வாழவேண்டும் மக்கள் நல்வாழ்வுவாழவேண்டும்; சிவ நாமம் முழங்கவேண்டும் என்று அப்பெருமான் திருவுள்ளத்தில் எண்ணுவாரானால் அவர்செய்த ஒவ்வொருகாரியங்களும் தன்பொருட்டென்று எவ்வாறு சொல்லமுடியும்? ஆகவே பெரியோர்களெல்லாம் ஒவ்வொருகாரியங்களும் தம்பொருட்டாகச் செய்துகொள்ளவில்லை; மக்களுடைய நன்மையின் பொருட்டே என்ற அளவில் நிறுத்திக்கொள்ளுகிறேன். ஞானசம்பந்தப்பெருமான் அவதாரஸ்தலத்தில் அவர்பெயரால் ஒரு கழகம் அமைப்பது யாவரும் போற்றக்கூடியதே. இக்கழகம் வளர்ந்தோங்கி ஞானசம்பந்தப்பெருமான் புகழை ஞாலமெலாம் பரப்புவதாக! உங்கள் அனைவர்க்கும் ஞானசம்பந்தப்பெருமான் திருவருளால் எல்லாநலனும் எய்துவதாக!!

4H3

# சிவபோகசாரம்

## "பொய்யில் காட்சியோர் பொருளுரை"

[வித்துவான் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்]

தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

தருமையாதீனத்தின் ஆதிபரமாசாரியராகிய குருஞான சம்பந்தர் அருளிய சிவபோகசாரம் என்னும் ஞானப்பனுவலை இத்தமிழகத்திற் பல நூற்றாண்டுகளாக ஓதியுணர்ந்து தீதின் நீங்கிச் சிவபோகத்தைச் சிலர் நுகர்ந்து வருதல் உண்டு. வேறு எந்நூலும் கற்றுணரவல்லரல்லராயினும், இச் சிவபோக சாரத்தைமட்டும் உணர்ந்துய்யும் நல்வினையுடையராயின் அவர்,

"கல்வி கரைஇல கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பால்உண் குருகின் தெரிந்து"

என்றதை நன்கறிந்து, அறிந்தவாறே செய்கையிற் காட்டியவ ராவார்.

சிவபோகசாரத்தில் உயிர்கள் கட்டற்று, திருவருள் பெற்றுச், சிவானந்தபோகம் உற்றுய்யும் வழிகளை, எளிய நடையில் அமைந்த இனிய வெண்பாக்களால் தெளியவுணர்த்தி யருளினர் அருளாசிரியர். அவற்றுள், இம்முதற் கட்டுரையில், "இருள்சேர் இருவினையுஞ் சேரா" வழி ஒருசிறிது விளக்கப் படும்.

வினையைக் கர்மம் என்பர் வடமொழியாளர். தொழில், செயல், செய்கை, கிரியை, கார்யம் முதலியனவும் வினை என்ற பொருளில் வரும். இடம் நோக்கிக் கருத்துக்கொள்ளல்வேண்டும். அவ்வினையை உயிர்கள் செய்தற்குக் காரணமாயிருந்ததை மூல கன்மம் (வினைவேர்) என்பர். அதைத்தான் ஆணவம் மாயை என்னும் இரண்டொடுசார்த்து மூன்றாக எண்ணுவர் அறிஞர். அது காரணமாதலின் காரியமான கன்மங்களைக் கான்மியம் என்றனர்.

444



தன்மமோ டதன்ம மாகித் தான்இரு பயனுந் தந்து
நன்மைதீ மையினும் இன்பத் துன்பினும் நாடிக் காண
முன்னமே ஆன்மா வின்றன் மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமும் மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்.

(சிவஞான சித்தியார். 130)

என்றதால், வினை நல்வினை (தர்மம்) தீவினை (அதர்மம்) என்று இருவகைப்படும் என்பதும், அவ்விரண்டில் நல்வினையால் நன்மை (புண்ணியம்) தீவினையால் தீமை (பாவம்) விளையும் என்பதும், அந்நன்மையுந் தீமையும் இன்பமும் (சுகமும்) துன்பமும் (துக்கமும்) ஆக்கும் என்பதும், இவற்றின்காரணமாய் ஒரு கன்மம் உண்டு என்பதும், இவை அதன் காரியமாய்க் கான்மியம் எனப்படும் என்பதும் அறியலாம்.

இவ்வினையை நீங்கினலன்றி உயிர்கட்குப் பிறப்பும் இறப்பும் ஒழியா. பேரின்பம் எய்தாது. வினையின் பரிணமமே இடும்பு, அகங்காரம், கோபம், அபிமானம், ஆசை முதலிய எல்லா அனர்த்தங்களும் ஆகும், இவற்றை நீங்கினல் இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தும், தாள் சார்ந்தும், வணங்கியும் எளிதிற் பிறவிப் பெருங்கடலை நீந்திவிடலாம். நீங்காவிட்டால் அரிது, அரிது, அரிது. இவ்வுண்மையைத் தருமைக் குருஞான சம்பந்தர் அருளிய சிவபோகசாரத் திருவெண்பா விளக்கும் அழகையும் இனிமையையும் தமிழர் நுகர்வார்களாக.

ஒருமையுடன் ஈசனருள் ஓங்கிஎன்றுந் தூங்கல்
அருமை அருமை அருமை - பெருமை இடும்பு
ஆங்காரம் கோபம் அபிமானம் ஆசைவினை
நீங்காத போதுதா னே.

ஆம், ஆம், இவ்வினை நீங்குவது எப்படி? சிவபோகம் ஓங்குவது எவ்வாறு? இவ்வாறு உள்ளத்தில் அறிஞர்க்கு வினு எழலாம். அவை எழும்போது,

வன்மைபுரி காய மரப்பாவை தன்னை அரன்
கன்மம்எனும் சூத்திரத்தால் கட்டியே - நன்மைதின்மை
ஆட்டுவது நாடாது அறிவிலார் தம்செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ நகை.

என்னதன்று நின்செயலே என்றறிந்தால் யான்விரும்பி
என்னஎன்று வாய்திறப்பேன்? ஈசனே-இன்னம் இன்னம்
எப்படியோ நாயேனை ஈடேற்ற வேண்டும்உனக்கு
அப்படியே செய்தருளு வாய்.

முன்னைவினைக் கிடா முதல்வன்அருள் நம்மைக்கொண்டு
என்னவினை செய்ய இயற்றுமோ? - இன்னவினை
செய்வோம் தவிர்வோம் திரிவோம் இருப்போம்இங்கு
உய்வோம் எனும்வகைஏ து?

மனவாக்குக் காயம்உயிர் மன்னிஅசைப் பானும்
அனம்ஆதி போகம்அளிப் பானும் - நனவாதி
கூட்டிவிடு வானும்முத்தி கூட்டிடுவா னும்பிறப்பில்
ஆட்டிவிடு வானும் அரன்.

முற்றின்ப மாம்அருளில் மூழ்குவதும் மோகமிகு
சிற்றின்ப மாம்மருளில் சேர்குவதும் - உற்றுஇங்கு
அறிந்தால்நல் நெஞ்சே! அகிலாண்டம் எங்கும்
செறிந்தான் செயலே தெளி.

என்றவாறு,

அவரவருக் குள்ளபடி ஈசன் அரு ளாலே
அவரவரைக் கொண்டியற்றும் ஆனல் - அவரவரை
நல்லார் பொல்லார் என்று நாடுவதுஎன் நெஞ்சமே
எல்லாம் சிவன்செயல்என் றெண்!

என நெஞ்சிற்கு அறிவுறுத்தி, அவ்வகையில் நிறுத்தி நின்றால் "இன்பசுகத்துள்ளே இருக்கலாம் எப்போதும் துன்பவினை தொடராது". தேகத்தை மறந்து திருவருளாய் நிற்கப் பழகுதல் வேண்டும். பழகினுற்றான் சிவபோகம் விளையும். இன்றேல், தீவினையால் வருந்தி வாடித் துன்பம் உற்றுப் பிறந்திறத்தல் ஒழியாது.

வினைக்கு முதல்வன் சிவபெருமான். நாம் அவனுக்குக் கருவியாயிருந்து, அவன் செய்விக்கச் செய்கின்றோம். அவ்வினைக்கும் நமக்கும் தொடர்பில்லை. வினைநிகழ்ச்சி நமக்கு வேறாகும்; அந்நிகழ்ச்சிக்கு நாம் வேறாவோம் என்று தன்பணி நீத்து இறைபணி நிற்றல் வீடுபேற்றிற்குச் சிறந்ததொரு தனிப்பெருவழி, அவ்வழியே வினையைப்போக்கும், இதைச் சிவபோகசாரத்துள்·

446

ஆறாறு தத்துவமும் ஆணவமும் நீங்கிஉயிர்
பேறாக ஆனந்தம் பெற்றாலும் - வேறாகப்
பார்த்திருப்ப தன்றியே பாழான கன்மத்தை
நீத்திருக்க லாமோ நிலத்து?

ஆனசுக துக்கத் தழுந்துகினும் ஞானிகள் தாம்
யான்எனதென் றெண்ணி இயைந்திடினும் - தான்அதற்கு
வேறுஎன்று அருளால் விரளமாய்க் காணில் என்றும்
ஏறுமோ கன்மம்? இலை.

எனவரும் திருவெண்பாக்களால் அறிந்து தெளியலாம். தெளிந்தவர் செயல் எல்லாம் பயனுடையனவேயாகும். வீண்செயல் ஒன்றுமிராது. எல்லாம் சிவன்செயல் என்று செய்வதே அதற்குக்காரணம். சிவனருள் உயிர் செய்த வினைக்கு ஈடாகச் செய்விக்கும் உண்மை உணர்வதே ஞானம். அந்த ஞானத்தை விளைவிக்கும் நெறியே சமயம் ஆகும். அச்சமயமே உயிர்க்குத் துன்பம் தொலைத்து இன்பம் எய்துவிக்கும், அதனால் சமயத்தை விட்டு இன்பம் அடைய முயல்கின்ற உயிர்க்குத் துன்பம் ஒழிய ஒருவழியும்இல்லை. துன்பம் நீங்கும்வழியை உபதேசத்தாலன்றி மற்றெதனாலும் உயிர் அறிதல் முடியாது. அவ்வுபதேசமும் நூல்வழி ஒழுகிவந்த நல்லவர்க்கு அன்றி அல்லவர்க்குக் கிட்டாது. சாத்திரமும் ஓதல்வேண்டும். அவற்றை ஓதிய பின்னும், அகலாத ஐயத்தைத்தீர்க்கவும் உண்மையை உணரவும் உணர்ந்தவாறு நிற்கவும் உபதேசம் இன்றியமையாதது. அவ்வுபதேசம் கடையில் விற்பதன்று, சாத்திரம் கடையிற் பெறலாயிற்று இக்காலத்தில், உபதேசத்தை எவ்வுலகிலும் எப்பொழுதிலும் கடையில் வாங்கல் ஒல்லாது. அவ்வுபதேசத்திற்கு என்றே தனி இடங்கள் உலகில் ஏற்பட்டுள. அவற்றுள், திருக்கயிலாயத்தில் சிவபிரானிடத்தில் உபதேசம் பெற்ற நந்திதேவர் பரம்பரையைச்சார்ந்த இடங்களே சைவமடாலயங்கள். அத்தகு சிறப்புடைய திருமடங்களுள் ஒன்று தருமபுரம் மடாலயம். அதன் ஆதி குருமூர்த்தியே இச்சிவபோகசாரத்தை அருளிய பெருமானார். அவர் திருவுளப்படி, உயிர்க்கு வினை நீங்கினால்தான் பேரின்பக் கதி உண்டு என்று எல்லாரும் அறிதல் ஆவசியகம். அறிந்து, தெளிந்து, வினை தீரும்வழியில் ஒழுகிப் பிறவிப்பயனைப் பெறுவாராக.

அனைத்துலகும் நம்பால் அநுக்கிரகம் பெற்றென்
அனைத்துலகும் நம்வசமாய் ஆய்என்? — அனைத்துலகும்
கொண்டாடில் என்னை? வினைக்கொத்தறுத்துப் பேரின்பம்
கண்டாடில் அன்றோ கதி.

(தொடரும்.)

# *சேக்கிழாரும்

# : : நாயன்மார் வரலாற்றுக் குறிப்புக்களும்

[டாக்டர், மா. இராசமாணிக்கம் M.A., L.T., M. O. L. Ph.D.]

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கும் தலைவர் அவர்களுக்கும் பெருமக்களுக்கும் வணக்கம். பெரியபுராணம் பிற காவியங்களைப் போலக் குறிப்பிட்ட ஒரு முதல் நூலில் இருந்து எடுத்து விரிக்கப்பட்டதன்று. அஃதாவது பெரிய புராணத்துக்கு முதல் நூல் இல்லையென்பது தெளிவு. அந்நிலையில் ஆசிரியர் சேக்கிழார் நாலாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களைக் கொண்ட பெருங்காவியம் செய்தாரெனின் அம்முயற்சிக்கு அடிப்படையாயிருந்தவை யாவை என அறிஞர் ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராய்ந்தால்தான் சேக்கிழாரது பேருழைப்பும் சிறப்பும் நன்கு புலனாகும். சைவத்திருமுறைகளே அவருக்குக் கிடைத்த இலக்கிய மூலங்களாகும். நம்பியாண்டார் நம்பி அறுபத்துமூன்று நாயன்மார்களையும் பற்றிப்பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி அவருக்கு ஓரளவு உதவி செய்தது என்னலாம். இவற்றைக் கொண்டு விரிந்ததொரு காவியம் பாடுதல் எளிதன்று!

அவர், இரண்டாம் குலோத்துங்க சோழனின் முதல் அமைச்சர்; எனவே, சோழப்பெருநாடு முழுவதும் சுற்றிப் பார்க்கும் பெருவாய்ப்புப் பெற்றிருந்தவர்; மேலும் சிறந்த சிவபக்தர்; பல்கலை விற்பன்னர், ஆதலால் நாயன்மார்கள் வாழ்ந்து மறைந்த இடங்களை எல்லாம் அவர் பார்வையிட்டார் என்று கூறலாம்; அத்துடன் பாடல் பெற்ற எல்லாப் பதிகளையும் நேரிற் சென்று கண்டவர் என்பதையும் வற்புறுத்திக் கூறலாம். நாயன்மாருள் முடியுடை மூவேந்தரும் அமைச்சரும் தானைத் தலைவரும் எனப் பொறுப்பு வாய்ந்த நிலையில் அடியார் சிலர் இருந்தனர். அவர்தம் வரலாறுகளைத் தகுந்த

---

*இது 21—5—51 மாலை தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டுப் பேரவையில் நிகழ்த்திய சொற்பெருக்கின் சுருக்கம்.

வாறு கூறுதல் சோழப்பெருநாட்டு முதலமைச்சருக்குச் சிறப்புத்தராது என்பதை நன்குணர்ந்த சேக்கிழார் அவர்தம் வரலாறுகளை நன்கு விசாரித்துப் பல உண்மைகளைத் தேர்ந்து தம் நூலைப் பாடியுள்ளார் என்பதை ஆராய்ச்சியாளர் நன்கறிதல் கூடும். இவையனைத்துக்கும் மேலாக, பல கோவில்களிலிருந்த கல்வெட்டுக்களையும், செப்புப்பட்டயங்களையும் சேக்கிழார் பார்வையிட்டவர் என்பதை அறிவுறுத்தச் சான்றுகள் உண்டு. பெரியபுராணத்திற் காணப்படும் மருத்துவ முறைகளைக் காணுபவர் ஆசிரியரது மருத்துவப் புலமையும், வானநூற் செய்திகளைக் கொண்டு அவரது வானநூற் புலமையும் இவ்வாறே பிறகலைகளில் அவருக்கிருந்த புலமையை நன்கு தெரியலாம்.

போதிமங்கையில் புத்தர்களுக்கும் சம்பந்தர்க்கும் நடைபெற்ற சமயவாதம், "மெலிந்த பஞ்சகம்" என்னும் பாலி நூலில் இருப்பதைக் காண பெருவியப்பு அடைகின்றோம். இங்ஙனமே ஆசிரியருடைய சமணசமய அறிவும் நமது வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியதாகும். இவ்வியத்தகு பல கலைப் புலமையும் ஆராய்ச்சி முறையும் கொண்ட பெரும் புலவர் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தைப் படிப்பதால் தமிழர் அல்லது பிறர் உணரலாகும் உண்மைகள் யாவை?

சங்க காலத்திற்குப் பிறகு தோன்றிய சமயப்போராட்டக் காலத்தில் தமிழர்களைப் பற்றிய காவிய நூலொன்றும் தோன்றவில்லை. பல்லவராட்சி ஒழிந்து சோழராட்சி தோன்றிய பிற்காலத்திலும் சேக்கிழார் காலம் வரைத் தமிழ்ப் பெருங்காவியம் ஒன்றும் தோன்றிலது. தமிழ்நாட்டு வரலாறுகளைக் கூறும் சிலப்பதிகார மணிமேகலைகளுக்குப் பிறகு தமிழ்நாட்டு மக்களைப் பற்றித் தமிழன் செய்த பெருங்காவியம் பெரியபுராணம் ஒன்றேயாகும். இது நன்கு கவனித்தற்குரியது. நாயன்மார் அந்தணர் முதல் பழந்தமிழர் இனம்வரை எல்லா வகுப்பினராகவும் இருந்தனராதலால் எல்லா வகுப்புக்களின் பழக்க வழக்கங்களையும் சொல் முறைகளையும் இந்நூலிற் கண்டுகளிக்கலாம். நாயன்மார் காலம்

449

கி. பி. 300–900, சேக்கிழார் காலமோ கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி. ஆசிரியர் நாயன்மார்களைப் பற்றிக்கூறும் விவரங்கள் நாயன்மார் வாழ்ந்த காலத்துக்கு ஒத்தனவாகவே இருத்தல் பல்லவர் கால இலக்கியம் கொண்டும் கல்வெட்டு கொண்டும் துணியலாம். எனவே ஆசிரியர் தமது கால நிலையையும் நாயன்மார் காலநிலையையும் ஒன்றுபடுத்திக் கூற வில்லை என்னும் சிறப்புச் செய்தி கவனிக்கத்தக்கது. ஆதலின் பல்லவர்காலத் தமிழ்ச் சமுதாயத்தை அறியவேண்டுமாயின் பெரியபுராணம் பெருந்துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை. பல்லவர்கால நாட்டுப் பிரிவுகள், ஆற்றுப் போக்குகள், கோவில்களின் நிலைகள் முதலியனவும் வேளைக்காரப்படை அரசர்க்கிருந்ததென்னும் உண்மையும் பிறவும் இப்பெரு நூலைக்கொண்டு நன்கறியலாம். சிறுத்தொண்டர் வாதாபியின் மீது படையெடுத்துச் சென்ற பல்லவனது தானைத் தலைவர் என்பது பெரியபுராணத்தாற்ருன் தெரியவருகிறது. அவ்வாறே அப்பரைக் கொடுமை செய்து பிறகு சைவனானவன் குணபரன் என்னும் மகேந்திரபல்லவன் என்னும் உண்மை பெரியபுராணத்தாற்ருன் தெரிய வருகிறது. இந்த இரண்டு வரலாற்று உண்மைகளே அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர் காலத்தை வரையறுக்கப் பெருந்துணை புரிந்தன எனின், இவ்வுண்மையைப் புலப்படுத்திய சேக்கிழார் பெருமானுக்கு வரலாற்று ஆசிரியர்கள் நன்றிசெலுத்தக் கடமைபட்டுள்ளனர் என்பது மிகையாமோ?

திருமூலர் காலத்திலிருந்து இலக்கியம் கொண்டு அறியப் படும் சைவசித்தாந்த உண்மைகள் சேக்கிழார் செய்யுட்களில் மணிகளாகப் பொலிகின்றன. அம்மணிகளைக் கொண்டு கோக்கப்பட்ட மாலைகளே பின் எழுந்த பதினன்கு சாத்திரங்களுமாகும், இங்ஙனம் வரலாறு—இலக்கியம்—கல்வெட்டு—சமயம்—பலவகைக் கலைகள் என்பவற்றையெல்லாம் தன்னகத்தே விளக்கமுறக்கொண்டு விளங்கும் பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் நாட்டுமக்கள் அனைவராலும் விரும்பிப் படிக்கத்தக்க அரிய நூலாகும்.

H80

# சைவ சமயத்தின் நிலை.

(தென்னுப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு, பிள்ளை அவர்கள்)

சைவ சமயத்தின் தற்கால நிலையை நோக்கும்பொழுது உண்மைச் சைவர் எவருமே உள்ளம் உருகாதிரார் எனலாம். சைவ சமயத்தின் உட்பொருளை ஆய்ந்திடுவார் எல்லாரும் இக்கொள்கையை எங்கும் பரவச் செய்வதால் உலகத்திற்கே பெரும்பயன் விளையு மென்பதை ஒத்துக்கொள்ளாமலிரார். உலகத்திலேயே விரிந்த கொள்கைகளுடைய மதம் எது என்று உண்மையாய் ஆராய்ந்திடுவார்க்கு அது சைவ சமயமே என்பது விளங்கும். ஆயினும் இதைப்பற்றி உலகத்தில் எத்தனைபேர் உணர்ந்திருக்கின்றனர்?

இவ்வுயர்ந்த மதம் அருகியிருப்பதற்குக் காரணந் தெரிந்து கொள்வது அரிதல்ல. சைவ சமயத்தைத் தம் சமயமாகவுடைய பெரும்பாலோர் குறுகிய நோக்கமுடையவராயிருத்தலே இதற்குக் காரணமாகும். சைவ சமயத்தை உலகத்தில் நாட்டுதற்பொருட்டு மாணிக்கவாசகர், திருமூலர், திருநாவுக்கரசர் முதலிய பெரியோர்கள் எத்துணை முயற்சி செய்தார்கள் என்பதை அவர்கள் எழுதிவைத்த நூல்களால் நாம் செவ்விதின் உணர்கின்றோம். அவ்வருட் குரவர்களின் உண்மைப் பொருளை அறியாத சில போலிமக்களின் பிடிவாதக் குணத்தானும் அழுக்கு மனத்தானும் இம்மதம் பெருக்கமடைதலில்லாமலிருக்கிறது. சிவம் சைவம் என்ற சொற்களின் உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ளாமல் மந்ததரர்கட்குச் சொல்லப்பட்ட மேல்வரம்பிற் காணப்படும் விதிவிலக்குகளே சைவ சமயத்தை ஆக்குவனவா மென்ற கொள்கையால், சில போலிமக்கள் இச்சிறந்த மதம் எங்கணும் பரவுவதற்குத் தடையாயிருக்கிறார்கள்.

திருநீறு பூசிக்கொள்வதும் உருத்திராக்கம் அணிந்து கொள்வதும் சைவ சமயிகட்குக் கடனாக விதிக்கப்பட்டிருப்பது உண்மையேயாயினும் அங்ஙனம் செய்யாதவரெல்லாம்

451

தம்மின் வேறுபட்டவர் என்ற கொள்கை சைவ சமயத்திற்குப் புறம்பானதென்றே நாம் காணுகின்றேம். கல்வித் துறைகள் பலவற்றினும் பயின்று மிகஉயர்ந்த ஆசிரியர் என்று அறிவிற் சிறந்த பெரியோர் பலராலும் மிகப் பெரிதும் புகழப்படும் ஹாவ்லக் எல்லிஸ் மதங்களின் மேல்வரம்பிற் காணப்படும் கிரியைகள் மனிதனைக் கபடனுக்குகின்றன என்று சொல்லுகிறர்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னர்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே"

என்ற திருநாவுக்கரசர் அருளுரையைப் பயின்ற நாம் எல்லிஸின் அறிவுரையை உவந்தேற்றுக் கொள்ளுகிறேம். விரிந்த அறிவுடைய எல்லோரும் இங்ஙனமே ஏற்றுக் கொள்வர் என்றும் நம்புகிறேம்.

திருநீறு பூசிக்கொள்வதாலும் உருத்திராக்க மணிந்து கொள்வதாலும் ஒருவன் உண்மைச் சைவனுய் விடுவானு? புனிதனுய் விடுவானு? இதனுல் விபூதியணிந்து கொள்வதையும் உருத்திராக்கமணிந்து கொள்வதையும் நாம் பழிக்கின்றேமென்று கொள்ளக்கூடாது. நாம் ஒருக்காலும் அவற்றைப் பழித்திடமாட்டோம். விபூதியணிந்துகொள்வதின் உண்மையான கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே நாம் வற்புறுத்துகிறேம்.

"பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"

என்று சொன்ன சேக்கிழார்பெருமான் விபூதி அணிந்து கொள்வதன் உண்மைப் பொருளை உணர்ந்திருக்கின்றனர். நாமும் அதுபோல் அதன் உண்மைப்பொருளை உணர்ந்து கொள்ளவேண்டும்.

"மனத்துக்கண் மாசில னுதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்று கூறிய திருவள்ளுவனுர்க்குத் திருநீறு அணிவதின் பொருள் விளங்கும். உண்மை இங்ஙனமாக நாம் அதை ஒரு கடமையாகக் கொள்வது சிறந்ததென்று தோன்ற மாட்டாது. உலக மெங்கணும் பெரும்புக ழெய்தி இறந்த ரவீந்திரநாத் தாகூர் தாமெழுதிய கீதாஞ்சலியில், கடமையென்ப தொன் றில்லாத வாழ்க்கையை எமக்கு ஈந்தருளுக என்று கடவுளை நோக்கிப் பிரார்த்திக்கிறுர். இக்கருத்தைத் தழுவிக் காலஞ் சென்ற ஜேம்ஸ் ஆலன் மனைவியார் தாம் நடாத்தி வந்த "ஈப்பாக்" என்ற உயர்ந்த ஆங்கில மாதப் பத்திரிகையில் மிக விரிவாக எழுதுகிறுர்.

இனிச் சிவமென்பது சைவ சமயத்திற்கு மாத்திரமே உரிய ஒரு கடவுளன்று; மங்களப் பொருளா யிருக்கும் கடவுளின் பெயரே அது என்பதை அறிஞர் மறுக்கத் துணியார். ஆதலால் எம் மதத்தினரும் வணங்கும் தெய்வம் சிவபெருமானே.

'விரிவிலா அறிவினுர்கள் வேருெரு சமயஞ் செய்தே
எரிவினுற் சொன்னுரேனும் எம்பிராற் கேற்ற தாகும்'

'யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனுர் தாம் வருவர்'

என்ற திருவாக்குகளை நாம் எண்ணுமற் போதல் செவ்விதாக மாட்டாது. இதனுல் எச்சமயமும் சைவசமயத்திற்கு உடன் பாடென்பது பெறப்பட்டது. இனி இறைவனடியார் எச் சாதியைச் சேர்ந்தவராயினும் அவரெல்லோரும் சைவசமயி களே யாவர்.

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆ உரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே,"

என்ற அருளுரையை நாம் பாராட்டாமற்போயின் நாம உண்மைச் சைவர்களாவோமா?

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென்செய்வீர்?
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளு மாற்பேறரே,"

என்று பின்னரும் திருநாவுக்கரசர் வற்புறுத்திக் கூறுகிறுர்.

சைவ சமயிகள் எல்லாவற்றைக் காட்டினும் சமயப் பொறுமையைத் தம்முள்ளே மிகவும் அபிவிருத்தி செய்து கொள்ளவேண்டும்.

"ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மில்லார்க்கு, ஆயிரம் திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ?" என்று ஸ்ரீமந் மாணிக்க வாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்திருப் பதால், பிற மதத்தினரைப் பழிப்பதும் அவரோடு வாதிடு வது மின்றி, உண்மையை அவர்க்கெல்லாம் உரைத்துவரும் சிறந்த தொண்டினை மேற்கொள்ள வேண்டும்.

"அன்பும் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே"

என்ற திருமூலர் பாட்டினைச் சைவசமயிகளாவார், கடவுளை நோக்கிப் பிரார்த்திக்குங்காலத்தெல்லாம் ஓதுதல்வேண்டும்.

---

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் - உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.
காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0
தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

அறத்துப்பால் கைவசம் இல்லை.

கிடைக்குமிடம் :- மானேஜர்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P. O.

சென்னையில்:

## தருமபுர ஆதீனம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

"ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்."

கடவுட்கொள்கையோடு கூடிய மொழிவளர்ச்சி நாட்டின் உயிர்நாடி. அதனை அன்று அரசர்களும் மடங்களும் வளர்த்து வந்தனர். இன்று அவற்றின் முழுப்பொறுப்பும் மதஸ்தாபனங்களைப் பொறுத்துள்ளது. அன்றைக்கு மடங்கள் "ஓடிவரும் காரணர்க்கு உண்மை வை" என்ற வண்ணம் தங்களைத் தேடி வந்தவர்களுக்கு உபதேசம் செய்துவந்தன. இன்று ஊர்ஊராகத் தேடிப்போய்ச் சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனைச் செவ்வையாக ஆற்றுவதே இம்மாநாட்டின் நோக்கம்.

சென்னை செந்தமிழ் நாட்டின் தலைநகரம். அங்கே எல்லாத் துறைகளிலும் சிறந்த அறிவாளிகள் இருக்கின்றார்கள். சென்னையே சென்னியாகச் செந்தமிழ்நாட்டை ஆளுகின்றது என்னலாம். அங்கே செய்யப்படும் பணிகள் நாடு முழுவதும் செய்வதாகும். பல மதத்தினரும் சேர்ந்து வாழும் அங்கே கடவுட் கொள்கையை வளர்க்கவேண்டுவது மிகத்தேவை. ஆதலின் தருமபுர ஆதீனத்தின் சார்பில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நடத்தற்குச் செயற்குழு ஒன்று அமைக்கப் பட்டது.

செயற்குழுவின் **தலைவர்**, ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், ஆதீனப் பிரசாரகோஷ்டித் தலைவர். **துணைத்தலைவர்** ஸ்ரீமத் பரமாத்மாநந்தா, ஆசிரியர், ராமகிருஷ்ணவிஜயம். திருப்புகழ்மணி, திரு. T. M. கிருஷ்ணசாமி அய்யர் B.A., B.L., திரு. N. ரகுநாதய்யர், துணையாசிரியர், ஹிந்து. தருமரக்ஷாமணி திரு. K. பாலசுப்பிரமணிய அய்யர் B.A., B.L., M.L.C., திரு. V. பாஷ்யம் அய்யங்கார் M.L.C., திரு S. இராமஸ்வாமிநாயுடு, B. A., சைவசித்தாந்தப் புரவலர், திரு. உ. ராம. உ. மெ. சுப. சேவு மெய்யப்ப செட்டியார்., **உறுப்பினர்:** பன்மொழிப்புலவர்,

455

திரு. T. P. மீனுட்சிசுந்தரம் பிள்ளை. M. A., B. L., சொல்லின் செல்வர், திரு. R. P. சேதுப்பிள்ளை B. A., B. L., திரு. கி. வா. ஜகந்நாத அய்யர் M. A., திரு. A. முத்தய்யா M. A., இசையரசு திரு. M. M. தண்டபாணி தேசிகர், திரு. R. மகாதேவன், துணையாசிரியர், ஆனந்தவிகடன். திரு. M. P. ஸ்ரீநிவாஸன், உதவி ஆசிரியர், சுதேசமித்திரன், திரு. தேவராஜ முதலியார் Rtd· D. S. P., Dr. திருமூர்த்தி, திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை B. A. L T, செயலாளர்: திரு. க. சோமசுந்தரம், தருமபுர ஆதீனப்புலவர், திரு. ச. தண்டபாணிதேசிகர்.

மாநாட்டிற்கென்று இடைவிடாது உடனிருந்து உழைத்தவர்கள் திரு. S. இராமசாமி நாயுடு, A. முத்தையா, தேவராஜ முதலியார், M. P. சீனுவாசன் முதலியோர்கள். செயலாளர் K. சோமசுந்தரம் அவர்கள் தமது கோயில் அலுவல்களுக்கிடையே இதற்கும் பெரும்பகுதி தந்து அலைந்து உழைத்தது மிகவும் பாராட்டற்குரியது. செயற்குழு அங்கத்தினர்கள் அனைவரும் 'இத்தனை நாட்களாகப் பலகிராமங்களில் செய்து வந்த பிரசார வேலைகளை உருவாக்குவது சென்னையின் உழைப்பு ஒன்றுமே. அப்படியிருக்க நீங்கள் சென்னையை விட்டுவிட்டுப் பல இடங்களிலும் ஓடி ஓடிச்செய்வது தற்கால சாந்தியாகுமேயன்றி நிலைத்த பயனைத்தராது; ஆதலால் சென்னையில் ஆண்டுக்கொருமுறையாவதுபிரசாரம்நடத்தல்வேண்டும்;ஆதீனத்திற்கும் சென்னைநகரத்திற்கும்நெருங்கிய பிரசாரத் தொடர்பு இருத்தல் வேண்டும்; அதற்கு இந்த மாநாடு பெரிதும் பயன்படும்' என்று ஊக்கம் ஊட்டினுர்கள். அதன்பயனுக இந்த மாநாடு பத்துநாட்கள் சென்னையில்பல இடங்களில் நடைபெற்றது.

**19—7—52 சனி முதல்நாள்:**

**சென்னை பூக்கடை மல்லீசுவரர்கோயில் அநுபூதி மண்டபத்தில்:** அநுபூதிமண்டபம் எப்பொதுமே ஆயிரக்கணக்கான அன்பர்களைக் கொண்டது. அதிலும் திருநெறிய தமிழைப் பற்றிச் சிந்திக்கத் தக்க தலைவர்களும் பேச்சாளர்களும் ஒன்று கூடும்போது சொல்லவாவேண்டும். மண்டபம் நிறைந்திருந்தது. வழிபாட்டுடன் கூட்டம் தொடங்கியது. சென்னை ஹைகோர்ட்

ஜட்ஜ் கனம் W.S. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். தொடக்கவுரை காலத்திற்கும் இன்றைய தேவைக்கும் சென்னை நிலைக்கும் ஏற்ப விருவிருப்பாக இருந்தது. அதில் அவர்கள் 'இந்து என்பவன் ஒவ்வொருவனும் இந்துதர்ம லட்சியங்களின் அடிப்படைக் கொள்கைகளைச் சரிவர உணர்ந்து கொள்ளவேண்டும். அதைப் பிறர்க்கு உணர்த்தவும் வேண்டும். இந்தக்காலத்திலோ நமது ஜனங்கள் மதத்தின் அடிப்படைத் தர்மங்களைப்பற்றிப் பெரும்பாலும் தெரியாமல் இருக்கின்றூர்கள். அதைப் பயன்படுத்திக்கொண்டு சிலர் நமது வேத சிவாகம சாஸ்திரங்களைப்பற்றித் தவருகத் துஷ்பிரசாரம் செய்கிறுர்கள். ஆதலால் ஒவ்வொரு இந்துவும் தமது இலட்சியங்களைத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நமது மதத்தைப் பழிக்கும் பலவித விரும்பத் தகாத போக்குகளால் மதக்கொள்கையிலும் கடவுள் நம்பிக்கையிலும் அவநம்பிக்கை பரப்பப்பட்டு வருகின்றது. அதுவும் இளைஞர்களிடத்தே மிக விரைவில் பரவுகிறது. ஆதலால் இன்றைக்கு இத்தகைய பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டுவது மிக அவசியத்தில் அவசியம். எத்தனையோ ஆக்கிரமிப்புக்களைத் தாண்டி- எத்தனையோ அந்நிய குருமார்களின் பிரசாரத்தைத் தாண்டி உயிர்பெற்று வந்த நமது இந்துமதம் அழிந்துவிடுமோ என்ற பயமில்லை. ஆனுலும் வருங்காலப் பெரியோர்களாகிய சிறுவர்கட்கு உண்மை உணர்த்தவேண்டுவது அவசியம். நாம் இந்துக்கள் என்பதை நினைவூட்டிக்கொண்டிருப்பன கோயில்களே. நமது குழந்தைகளின் கல்வி முறைக்கான பாட புஸ்தகங்களில் புராண இதிகாசங்களி லிருந்தும் உபநிஷத்துக்களிலிருந்தும் கதைகள் சேர்க்கப்படவேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் மதபோதனை அவசியம் இருக்கவேண்டும். பிஞ்சாயிருக்கிற நம் இளைஞர் மனங்கள் வெதும்பி விழாதபடி கனியாகின்ற வரையில் காப்பாற்றவேண்டும். பிற்பாடுதான் அவர்கள் மதத்தத்துவத்தை உள்ளபடி உணர்ந்துகொள்வார்கள். அதனுல் மதச்சார்பற்ற அரசாங்கத்தின் தன்மைக்கு ஹானி ஒன்றும் ஏற்பட்டுவிடாது. இந்தப்பிரசார வேலையைக் கோவில்களும் மடங்களுமே செய்யவேண்டும். இதனுல் உண்மை ஓங்கும். பற்றுமிகும். ரேடியோக்களும் சமயவளர்ச்சிக்குத் தக்க துணை செய்யவேண்டும்' என்ற கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டன.

தலைமைவகித்த ஸர். பி. டி. இராஜன் அவர்கள் 'தமிழ் மொழியையும் தமிழர் மதத்தையும் காப்பாற்ற ஏற்பட்டன மடங்கள். இது சுதந்தரக்காலம். சுதந்தரம் என்றால் மக்கள் தங்கள் பொறுப்பை நினைக்காத நேரம். இப்படிப்பட்ட காலத்தில் தருமபுர ஆதீனத்தலைவர் அவர்கள் தமிழ்மொழியின் வாயிலாக மதப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவது மிகவும் போற்றத்தக்கது. சிலபேர் தான்தோன்றித்தனமாகப் பொறுப் பற்ற முறையில் பேசுவதால்தான் நாடு இந்நிலைக்கு வந்து விட்டது, பாருங்கள். விக்கிரக ஆராதனையிலுள்ள அடிப்படைத் தத்துவங்களை- முறைகளை அறிந்து கொள்ளாமலேயே சிலர் வாய்க்கு வந்தபடி பேசிப் பலரைக்கெடுக்கிறார்கள். மக்களுக்குச் சரியான முறையில் வழிகாட்ட, ஒழுக்கத்தில் உயர்ந்த மக்கள் இல்லாததுதான் காரணம். இப்பொழுது மனத்தையும் உடலையும் அடக்கிய உயர்ந்த தலைவர்கள் - அரசர்கள் தேவை. மதப்பற்றில்லாமல் எந்தநாடும் தழைத்ததில்லை - தழைக்கப் போவதில்லை. இது சரித்திர உண்மை. பக்தி ஒன்றுதான் மக்களின் முன்னேற்றப்பாதை' என்று பேசினார்கள். 'திரு நெறிய தமிழ்' என்பது பற்றித் தருமபுர ஆதீனப்புலவர் காஞ்சிபுரம் **திரு. க. வச்சிரவேலு முதலியார்** அவர்கள் சாஸ்திர தோத்திரப் பிரமாணத்துடன் விளக்கிப் பேசினார்கள். 'தெய்வத் தமிழ்' என்பது பற்றித் **திருப்புகழ் மணி** அவர்கள் பக்திப் பிரவாகத்திலே அனைவரையும் அமிழ்த்தி எடுத்து எல்லாரை யும் அன்புருவாக—சிவமயமாக ஆக்கிவிட்டார்கள். வரவேற் புரை வழங்கிய **திரு. S. இராமசாமி நாயுடு** அவர்கள் நாட்டில் தெய்வத் தமிழ்தான் வளரவேண்டும் என்று வற்புறுத்தி எல்லோரையும் வரவேற்றார்கள். ஆதீனப்புலவர் தண்டபாணி தேசிகர் நன்றிகூற முதநாள் தொடக்கவிழா ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் இனிது நிறைவேறியது.

**20—7—52 ஞாயிறு 2-ம் நாள்:**

இது நீதித்தமிழ் நாள். இன்று ஆதீனத்தின் அரியபெரிய உதவியால் வெளிவந்த திருக்குறள் காமத்துப்பால் வெளிவரும் நாள். வள்ளுவர் அவதரித்த இடமாகிய **மயிலாப்பூர் வள்ளுவர் கோயிலில்** இவ்விழா மாலை 6-மணிக்கே தொடங்கியது. ஓய்வு பெற்ற டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், **திரு. கோதண்டபாணிபிள்ளை அவர்கள்**

எல்லோரையும் வரவேற்றுர்கள். சென்னை பாராளும் மன்றத்து அவைத்தலைவர் ஸ்ரீ ஜெ **சிவசண்முகம்பிள்ளை** அவர்கள் தலைமை ஏற்றுர்கள். இது திருக்குறள் சகாப்தம்; அறிஞர்வாயில் தவழ்ந்த திருக்குறள் இன்று அரசவை ஏறிவிட்டது. ஏன்? மத்திய சட்டசபையிலுங்கூட நடமாடுகின்றது. திருக்குறள் ஒன்றே காலத்துக்கும் தேசத்துக்கும் பொதுவான சட்ட திட்டங்களை விதிக்கும் நூல். இதனை வெளியிட்டுத் திருக் குறளுக்கும் சமயத்துக்கும் தருமபுர ஆதீனகர்த்தர் புத்துயிர் அளித்ததுகண்டு மிகவும் நான்சந்தோஷிக்கிறேன். இக்காலத்தில் மதத்தைத் துவேஷிப்பவர்கள் சிலர் இந்துமதத்தை மட்டும் துவேஷிக்கிருர்கள். விஷயந்தெரியாத மக்கள் இது உண்மை என்று நம்பிவிடுகிருர்கள். வெறுக்கவும் தொடங்குகிருர்கள். இதனைப் பயன்படுத்திக்கொண்டு பிறமதஸ்தர்கள் அவர்களைத் தங்கள் மதத்திற்கு இழுத்துக்கொள்ளுகிருர்கள். மதத்துவேஷப் பிரசாரம் வேறுமதத்தைத் தழுவப் பயன்படுகிறதே யன்றி மதத்தையே வெறுக்கப்பயன்படுவதில்லை. இந்த அபாயத்தைத் துவேஷப் பிரசாரகர்கள் நன்ருகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு நேரமும் ஆர்வமும் ஏது? எங்கே தெரிந்து கொள்ளப்போகிருர்கள். இதனைத்தடுக்க நாமெல்லாரும் ஒரே முகமாக முயற்சிசெய்யவேண்டும் என்று பேசினுர்கள்.

பின்னர் ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைவளம் பழைய உரைகளாக உள்ள ஐந்தைக்கொண்டதென்றும், வரம் புக்கு அப்பாற்பட்ட புதிய கருத்துக்களுக்கு இடந்தரவில்லை என்றும் கூறித் தமது அநுபவங்களையெல்லாம் உணர்ச்சி ததும்ப விரித்துரைத்தார். அதனேடு வள்ளுவர் அவதாரத் தலத்திலேயே—அந்த இலுப்பமரத்தடியிலேயே வெளியீட்டு விழாநடக்க வாய்ப்புக்கிடைத்தது திருவருள் விசேஷம் என்றும் உரைத்தார். பின்னர் பன்மொழிப்புலவர் திரு. **தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை** அவர்கள் 'மனிதனுக்குச் சாவாவரம் தருவது திருக்குறள் ஒன்றே. நல்லநூல் எதைக்கண்டாலும் ஏசியும் பேசியும் கொளுத்தியும் வருகின்ற கூட்டத்தார்கூட வள்ளுவரை ஏசாதது வள்ளுவரிடமிருந்த மாயாஜாலவித்தையே. இந்த இருபதாம் நூற்றுண்டிலும் அறிவுத்துறையில் மயங்காத அவர்களையும் வள்ளுவர் மயக்கிவிடுகிருர். ஏன் அன்றைக் குங்கூட இந்த சாந்தோம் பகுதியில் வாழ்கின்ற கிறிஸ்தவர்

459

களால் தங்களுடையதென்றே கொண்டாடப்பெற்றது. ஜி. யு. போப் அவர்களும்கூட கிறிஸ்தவப்பெருமானுடைய உபதேச ரத்னங்களே திருக்குறள் என்கிறார். இன்றைக்குக் கருப்புச் சட்டைக் காரர்களுங்கூட எங்கள் நூல் எங்கள் நூல் என்று துள்ளிக்குதிக்கவைத்துவிடுவார்களானால் இந்தக் காட்சியை வேறு எங்குதான் காணமுடியும்? உள்ளபடியே உபநிஷதங் களைப் படித்தவர்கள் திருக்குறளில் ஈடுபடாமலிருக்கமுடியாது. காமத்துப்பால் சிற்றின்பத்தின் வாயிலாகப் பேரின்பத்தின் அநுபவங்களைத் தெரிவிக்கும் அருமையான பகுதி. வள்ளுவர் வழியைப் பின்பற்றியே நால்வர்களும், ஆழ்வார்களும் அகப் பொருள் பாடலை அமைத்தார்கள். இந்த உரைவளப் பதிப்பை அருமையான ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் - ஒரு விரிந்த ஆராய்ச்சியுடன் தனிமனிதன் முடித்துவிட்டான். இது பல்கலைக்கழகமும், பல புலவர்களும், அரசாங்கமும் இருந்து செய்யவேண்டியவேலை. இதனை முடிக்கத் தருமையாதீனகர்த் தரின் மனம் ஈடுபட்டது. இன்று நாடு இருக்கிறநிலையில் சமய உணர்ச்சியைப் பரப்ப இவர்கள் முன்வந்ததையும் சேர்த்து எண்ணும்போது மனமகிழ்ச்சி ஏற்படுகின்றது. இத்தகைய வெளியீட்டின் வாயிலாகத் தமிழ்நாடு நல்ல தொண்டைப் பெற்றது' என்று பேசினார்கள்.

பிறகு சொல்லின்செல்வர் திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள் 'வள்ளுவர் வாழ்வு பொதுநெறிக்கே. அந்தப்பெருமை அவர்க்கே உரியது. உரைவளம் வெளியீடு மிக உயர்ந்தபணி; அரியபணி. அரசாங்கமும் பல்கலைக்கழகமும் செய்யத் துணிவாக இருந்த காரியத்தைத் தனிப்பட்ட புலவர் செய்தார் என்று மீனாட்சி சுந்தரனார் பாராட்டினார். தனிப்புலமையின் சிறப்பை இதில் காண்கிறோம். தனிப்பட்ட புலவர் தன்முயற்சியால் இதைத் தந்தது தமிழ்நாட்டின் பெருமையைக் காட்டுகிறது. இத்தகைய பணிக்கு நாம் ஊக்கம்காட்டவேண்டும். இப்பணி உலகிற்குப் பயன்பட ஆதீனகர்த்தருடைய ஆதரவு மிகமிகப் போற்றத் தக்கது. ஆதீனங்கள்வேறு நாம்வேறு என்றிருக்கக்கூடாது, ஆதீனங்கள் நம்முடைய நிலையங்கள். ஆதீனங்கள் பொது ஜனத் தொடர்பைப் பெருக்கிக்கொள்ளவேண்டும். ஆதீனங்கள் செய்யும் நற்பணிகளுக்கு ஆதரவு அரசாங்கமும் தரவேண்டும். சென்றவாரம் நம் சட்டசபையிலே குறள் நடமாடியது. மது

பானத்திற்கு ஆதரவாகச் சிலர் குறளை எடுத்தாண்டார்கள். வள்ளுவர் இன்றும் கள்ளை வெறுக்கிறார். "இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்று பொருட்பாலில் பிரஸ்தாபிக்கிறார். அறத்துப்பால் தனிமனிதனுடைய ஒழுக்கம் கூறுவது. பொருட்பால் அரசாங்கத்தினுடைய—சமுதாயத்தினுடைய கடமையைச் சொல்வது. நமது அரசாங்கம் விபசாரத்தையும் கள்ளையும் ஒழித்துவிட்டது. சூது ஒன்றுதான் இருக்கிறது. அதனையும் ஒழித்துப் பெருமை கொள்ளவேண்டும். தெய்வவுணர்ச்சி குறளில் எங்கும் காட்சி அளிக்கிறது. ஆதலின் முப்பாலையும் முறையே ஓதியுணர்ந்தால் நம்பண்பாட்டை நாம் உணரலாம்' என்றார்.

தலைவர் அவர்கள் முடிவுரையாக, குறள் படிப்பதின் அவசியத்தை எடுத்துக்காட்டி மொழிவெறுப்புக்கூடாது என்று மொழிந்தார்கள். பின்னர் ச. தண்டபாணி தேசிகர் நன்றிகூற வள்ளுவர் வழிபாட்டுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## 21—7—52 திங்கள் 3-ம் நாள்:

**சிந்தாதரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில்** மாலை 6-மணிக்கு விழா தொடங்கிற்று. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திரு. டாக்டர். **பி. சுப்பராயன்** அவர்கள் தலைமையுரையில், 'நவநாகரிகம் நமக்குத் தந்த நன்மைகள் சில. தீமைகளும் உள்ளன. கடவுள் இல்லை என்று வாதிப்பவர் சிலர்; இருக்கிறாரா இல்லையா என்பவர் சிலர். இவைகளெல்லாம் நவநாகரிகத்தின் விளைவு. இவர்களுக்கு உயர்ந்த லட்சியஞானமும் உபதேசிப்பவர்களும் தேவை. பிரசாரம் இதற்குப் பயன்படும். துரதிஷ்டவசமாக இன்று மக்கள் மனம் குழம்பிக்கிடக்கிறது. இப்படிக்கிடந்த பழையகாலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்திமார்க்கத்தைப் போதித்தார்கள். மக்கள் மனம் சாந்தியடைந்தது. சமீபத்தில் மகாத்மா காந்தியடிகள்கூட சத்தியமே தெய்வம் என்று கண்டார்; பரப்பினார். அதனால் விடுதலைபெற்றோம். அது நிலைத்திருக்க நாம் செய்யவேண்டிய கடமைகள் மிகப்பல உள்ளன. அவற்றில் ஒன்று அமைதியான அன்புப்பிரசாரம். அதை ஆதீனம் செய்துவருகிறது. நான் அதனை மிகமிகப் பாராட்டுகின்றேன்' என்று குறிப்பிட்டுப் பேசினார்கள்.

461

பிறகு காமாட்சிதாஸர் திரு. R. சோமசுந்தரஐயர் அவர்கள் பக்தியின் பண்பும் பயனும் என்பதுபற்றிப் பேசுகையில் பக்தி வேறு, பண்புவேறு, பயன்வேறு அன்று. எல்லாம் ஒன்றே என்று எடுத்துக்காட்டிப் பல அனுபவங்களைச்சொன்னார்கள். அடுத்து சென்னை ஸ்மால்காஸ்கோர்ட் ஜட்ஜ் திரு. ராபர்ட் சுந்தரம் அவர்கள் உண்மைஞானத்தைப்பற்றி எடுத்துப் பேசுகையில் உண்மையில் ஞானத்தில் எல்லாரையும் லயிக்கச்செய்துவிட்டார். பிறகு கடவுள்வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

**22—7—52 செவ்வாய் 4-ம் நாள்:**

**எழும்பூர் ஸாகேதநிலையம்** நல்ல இடம். நாள்தவறாமல் சத்கதாகாலக்ஷேபம் சதாநடந்துகொண்டிருக்கும். ஆஸ்திகத்திற்கு அதை ஒரு பாசறை என்றுகூடச் சொல்லலாம். அந்த இடத்திலே விழா தொடங்க திரு **வி. பாஷ்யம்ஐயங்கார்** அவர்கள் தலைமைதாங்கினார்கள். மனிதவாழ்விற்குத் தெய்வ நம்பிக்கை தேவை. இதுதான் நமதுநாட்டிற்குப் பழமையான பெருமையைக் கொடுத்துவருகின்றது. அதனை நம்நாடு இப்பொழுது இழந்துவருகிறது என்றுகூடச் சொல்லலாம். பொது ஜனங்களுக்குப் பொதுக்காரியங்களில் சிரத்தையில்லை. மதப் பிரசாரம் செய்பவர்கள் சிறந்த அனுஷ்டானபரர்களாக—ஒழுக்க சீலராக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய வாக்கிற்கும் செயலுக்கும் தெய்வசக்தி உண்டு. குறிப்பாகப் பள்ளிக்கூடங்களில் மதக் கல்வி அவசியம். இதைப்பற்றி ஆலோசிக்க எல்லா மடாதிபதிகளும் ஒன்றுகூடவேண்டும் எனத் தலைமையுரையில் எடுத்துப் பேசினார்கள்.

திரு. **சச்சிதானந்தம் பிள்ளை** அவர்கள் சமயப்பிரசாரங்கள் பெரியவர்களுக்கு இன்று தேவையில்லை. சிறுவர்களுக்குத்தான் தேவை. சிறுவர்கள் சமுதாயம் மிகவும் சீர்கேடடைந்து வருகிறது. அதை ஒழுங்குபடுத்த நித்ய கர்மா அனுஷ்டானங்கள், கோயில் வழிபாடு, வாரவழிபாடு இவைகள்மூலம் சமயத் தொடர்பு உண்டாக்கவேண்டும். தெய்வநம்பிக்கையின் அவசியத்தை மேல்நாடுகள் இப்பொழுது உணர ஆரம்பித்துவிட்டன. என்று மொழிந்தார்கள்.

462

திரு. K. பாலசுப்பிரமணியம் அவர்கள் அப்பர் சுவாமிகளை தமிழ்நாட்டுக்குக்கிடைத்த அதிர்ஷ்டமென்றும், அவர்களுடைய பாடல்கள் பக்திமார்க்கத்திற்கு எவ்வளவு உபயோகமாக இருக்கிறதென்றும் எடுத்துப் பேசி, பல பாடல்களைச் சொல்லிச் சுவைத்து எல்லோரையும் பக்திமார்க்கத்தில் ஆழ்த்தினர்கள். தமிழ்மொழிக்கும், வைஷ்ணவசமயத்திற்கும் உள்ள தொடர்பைத் தொல்காப்பியர் காலமுதல் இன்றுவரை பல மேற்கோள் காட்டி திரு. வரதராஜ ஐயங்கார் அவர்கள் விளக்கிப் பேசினர்கள். ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

**23—7—52 புதன் 5-ம் நாள்:**

புரசைவாக்கம் ஸ்ரீ கங்காதரேசுவரர் கோயிலில் நடைபெற்றது. டிரஸ்டி திரு. க. சோமசுந்தரம் அவர்களால் இவ்வாண்டு தான் ஆடிப்பூர உற்சவம் வெகுவிமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது. அதில் தேவியின் உரியநாளாகவே இது அமைந்தது. ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் டி. எல். வெங்கட்டராமஐயர் அவர்கள் தலைமைதாங்கி, தாயின் வழியே அல்லாது கருணையைப்பெற முடியாது. நாஸ்திகப் பிரசாரத்தைத் தடுக்க இத்தகைய மாநாடுகள் தேவை. சென்னை பலவேறு வழிகளில் மனதைப் பறிகொடுத்து ஈஸ்வர நம்பிக்கையை இழந்துவருகிறது. அதை ஒழுங்குபடுத்தவே தருமபுர ஆதீனகர்த்தர் மாநாடுகளைக் கூட்டியுள்ளார். அதுபற்றி நான் மிகவும் பாராட்டுகிறேன். தெய்வ உபாசனையின் மூலம் இம்மையில் செல்வத்தையும், மறுமையில் மோட்சத்தையுங்கூட அடையலாம் என்று விளக்கிப் பேசினர்கள். அடுத்து, இந்து துணையாசிரியர் திரு. N. ரகுநாத அய்யர் அவர்கள் சக்தியின் மகிமைகளைக் கூறும் இலக்கியங்களை எடுத்துக்காட்டி அழகாகப்பேசினர். அபிராமிசுந்தரியைப் பற்றியும், அபிராமிபட்டரின் வரலாறு பற்றியும், அபிராமி அந்தாதியின் இலக்கிய நலங்களைப்பற்றியும் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பிரசங்கித்தார்.

திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் திரிபுரை என்னும் பொருள்பற்றிப் பேசும்போது, நம்முடைய ஆலயங்கள், உற்சவங்கள் இவற்றினுடைய அடிப்படையைத் தெரிந்துகொள்ள வேண்டும். இலக்கியநலங்களை அறிவதன்மூலம் ஸ்தோத்திரங்

களைச் சுவைப்பது, சினிமாக்காட்சியின்மூலமாகக் கீதை படிப்பதுபோலாகும். ஸ்தோத்திரங்கள் தேவியினுடைய தடத்தஸ்ரூபலட்சணங்களையும், மந்திரங்களையும், யந்திரங்களையும் அறிவிப்பன என்றும், அவற்றை அறிந்து படித்தால்தான் ஸ்தோத்திரத்தைப் படிப்பதற்கான உண்மையான பலன்கள் கிடைக்குமென்றும் கூறினர். பிறகு க. சோமசுந்தரம் நன்றியுரை கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

## 24—7—52 வியாழன் 6-ம் நாள்:

**வண்ணாரப்பேட்டை தியாகராஜா காலேஜ் தமிழ்ப்பெரு மன்றத்தில்** திரு. **அ. கஜபதி நாயகர்** அவர்கள் தலைமையில் விழா நடந்தது. அட்வகேட் ஸ்ரீ **வேணுகோபால் நாயகர்** அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப்பேசினர். தலைவரவர்கள் சாஸ்திரமேதான் தமிழ்; தமிழைச் சாஸ்திரம்படிப்பதற்காகப் படிக்க வேண்டும். அப்படியில்லாமல் சங்கத்தமிழ்வரையில் சொற்கூட்டங்களைக் கற்றுக்கொள்வதற்காகப் படித்துப் பண்டிதராகிறார்கள். அதனால் பண்டிதர்கள் சுயமரியாதைக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆதலால் படிப்பாளிகள் சாஸ்திரத்திற்காகத் தமிழைப் படிக்கவேண்டுமென்று வற்புறுத்தினர்கள்.

ஸ்ரீ **தேவசேனபதி** M. A., அவர்கள் சித்தாந்த சாஸ்திரங்களிலே சிவஞானசித்தியார்தான் பூரணமான நூல் என்றும், தத்துவசாஸ்திரங்களில் சித்தாந்தந்தான் மிகப் பழமையானது என்றும், அது ஸ்ரீகண்டபரம்பரையில் இருந்து தொடங்குகிறது என்றும், இதம்செய்வது புண்ணியம் அதைச்செய்யாமல் இருப்பதொன்றே பாபமென்றும் உயிர்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் உபதேசம் செய்தார்கள்.

வித்துவான், திரு. **அருணைவடிவேலு முதலியார்** அவர்கள் திருக்குறளுக்கும் சித்தியாருக்கும் உள்ள பல ஒற்றுமைகளை எடுத்து விளக்கிக்காட்டினர்கள்.

திரு. **சண்முகசுந்தரஞ் செட்டியார்** அவர்கள் எல்லா மதத்தினுடைய அடிப்படையான தத்துவம் ஒரேமாதிரிதான் என்றும், மதச்சண்டை தேவையில்லை என்றும், அவரவர் மதங்களை அவரவர்கள் பின்பற்றினல் போதுமென்றும் விளக்கிக்காட்டினர். திரு. **P. M. லிங்கேசன்** B. A., அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

H64



**25—7—52 வெள்ளி 7-ம் நாள்:**

**திருவல்லிக்கேணி நேஷனல் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில்:** ஔவைத் தமிழ் நாள்; ஸ்ரீமதி ஈ. டி. இராஜேஸ்வரி அம்மையார் M. A., அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. நம்முடைய மதத் தத்துவங்கள் பூரணப் பிரகாசம் பெறவேண்டுமானால் மாதர்கள் தங்கள் கடமையினின்றும் தவறக்கூடாது. இப்போது ஆஸ்திகப்பிரசாரம் தேவை என்பது நாட்டின் அறியாமையைக் காட்டுகிறது. இன்றைக்குக் காணுகின்ற ஆஸ்திகமும் பெண்களிடந்தான் இருக்கின்றது. ஆதலால் அவர்கள் ஒவ்வொருவரும் திலகவதியாராகவும் மங்கையர்க்கரசியாராகவும் தொண்டாற்றவேண்டுமென்று தமது தலைமையுரையைச் சுவை ததும்பப் பேசினார்கள்.

தமிழாசிரியை ஸ்ரீமதி இராஜரத்தின அம்மையார் M. A, அவர்கள் தமிழ்பரப்பும் தொண்டர் என்றவகையில் சுந்தரர் வரலாற்றைச் சொன்னார்கள்.

ஸ்ரீமதி குசுப்பிரியை அவர்கள் 'கீதை செல்வம்' என்பது பற்றிப் பேசும்போது காணப்படுவனவெல்லாம் செல்வம் அல்ல கருதப்படுவனவெல்லாம் செல்வம் என்பதை விளக்கி, செல்வன் கழல் ஏத்தும் செல்வமே செல்வம் என்று கூறி முடித்தார்கள்.

பண்டிதை, ஸ்ரீமதி **நாராயண** அம்மையார் அவர்கள் 'அநங்கன் வழிபாடா? ஆசாரியன் வழிபாடா?' என்றதலைப்பில் ஆண்டாளுடைய பக்திப் பிரவாகத்திலிருந்து சில சொற்களை எடுத்துக்காட்டி, மிகவும் நுணுக்கமாகத் தாம் ஆராய்ந்துவந்த ஆராய்ச்சி உரையைப் பேசினார்கள்.

திரு. **கோதண்டபாணி பிள்ளை** அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

**26—7—52 சனி 8-ம் நாள்.**

26—7—52 சனிக்கிழமை பிரபந்தத் திருநாள்: **மாம்பலம் சிவவிஷ்ணு கோயிலில்** நடைபெற்றது. எல்லா ஏற்பாடுகளையும் டிரஸ்டி **ராவ்பகதூர் சின்னசாமி அய்யர்** அவர்களும்,

S. **இராமசாமி நாயுடு** அவர்களும் செய்திருந்தது மிகவும் பாராட்டத் தக்கது. சின்னசாமி அய்யர் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் தர்மம் அழிந்து - ஆஸ்திகம் அழிந்து வருகிற இந்த நாளிலே அதை உத்தாரணம் செய்வதற்காகத் தருமபுர ஆதீன கர்த்தரவர்கள் பிரசார கோஷ்டி ஒன்று ஆரம்பித்து இப்படி எல்லாப் பேட்டைகளிலும் ஏற்பாடு செய்திருப்பது மிகவும் மெச்சத்தகுந்த காரியம் என்று பாராட்டினார்கள். பின்னர் தலைமைவகித்த T. M. **நாராயணசாமிப் பிள்ளை அவர்கள்** காலத்திற்கேற்ப ஆதீனம் மூன்றுவிதமான பணிகளைத் தொடங்கியிருக்கிறது. ஒன்று கோயில் திருப்பணி; இரண்டு நூல் வெளியீடு; மூன்று நூலைப்படிக்க முடியாதவர்களுக்குப்பிரசாரம். காந்திஜி தம் கொள்கைகளைப்பரப்பநாடெங்கும் பிரசாரகர்களைப் பரப்பியதுபோல இப்பொழுது நாடெங்கும் ஆஸ்திகத்தைப் பரப்புதல் அவசியமாயிருக்கிறது. எல்லா மதங்களும் அடிப்படையில் ஒன்றே என்று உணர்ந்து மதச் சண்டையில்லாமல் இருக்கவேண்டும் என்பதே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எண்ணம். ஆதலாலே பிரபந்தத்தின் தினநாளைக் கொண்டாடும்படிக் கொடுத்திருக்கிறார்கள். பின்னர் **ஸ்ரீ பரமாத்மாநந்தா** அவர்களும் பி. **ஸ்ரீ ஆச்சார்யா** அவர்களும் பிரபந்தத்திலுள்ள சாரமான விஷயங்களை வியாக்கியானங்களோடு எடுத்துக்காட்டினார்கள். காலம் போனதே தெரியாமல் எல்லோருங் கேட்டுக் களித்தார்கள்.

பிறகு திரு. **இராமலிங்கம் பிள்ளை** அவர்களும், திரு. **குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களும்** பாம்பன் சுவாமிகள் பிரபந்தத்தைப் பற்றியும் திருவாசகத்தைப் பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். சின்னசாமி அய்யரவர்கள் நன்றிகூறக் கூட்டம் முடிந்தது.

## 27—7—52 ஞாயிறு 9-ம் நாள்

27—7—52 ஞாயிறன்று மாலை 6மணிக்கு **மௌவுண்ட்ரோடு மகாஜன சங்கத்தில்** பொருளாதார **மந்திரி, சி. சுப்பிரமணியம்** அவர்கள் தலைமையில் 'இலக்கியத் திருநாள்' ஆரம்பமாயிற்று. அறிவில் முதிர்ச்சி அடைந்தவர்களைக் காட்டிலும், சாதாரண

4166



மக்களுக்கே தெய்வ நம்பிக்கை அவசியம். அவர்கள் ஆராய்ச்சிக்கு இடங் கொடுக்காமல் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் உடையவர்களாக இருப்பார்கள். ஆராய்ச்சி என்பது அநீதியை நீதியாகக் காட்டிக்கொள்ளச் செய்யும் மேற் பூச்சுதானே. அந்த ஆராய்ச்சியுள்ளவன் நம்பிக்கையோடு இருக்க முடியாது. தெய்வ நம்பிக்கையைப் பரப்புந் தொண்டில் ஆதீனங்கள் ஈடுபட்டு இருக்குந்தொண்டை நான் போற்றுகிறேன். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பது அந்தக்காலத்து 'அரசன் ஆண்ட போதிருந்த பழமொழி. 'மக்கள் எவ்வழி அவ்வழி மந்திரிகள்' என்பதுதான் இக்காலத்துப் பழமொழி. மக்களிடத்து ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லையானுல் மந்திரிகளாய் யார் இருந்தால்தான் என்ன? எல்லாஞ் சரிதான். ஜனங்களுடைய நல்லுணர்வினுல்தான் ஜனநாயகம் தழைக்கமுடியும். நவீன நாகரிகத்தின் விளைவுகளெல்லாம் நம்முடைய அறிவாலேயே ஆனதென்று நம்மையே நாம் மெச்சிச்கொள்கிறோம். அதைத் தான் பகுத்தறிவியக்கம் பேசுகிறது. நாமோ நம்முடைய அறிவியல் சக்திகள் எல்லாவற்றையும் இயக்குகிற சக்தி இருக் கிறது அதனுலேயே நாம் இயங்குகிறோம் என்றெண்ணுகிறோம். இவர்களைத்தான் அறிவு மலர்ச்சியுற்றவர்களாக அறிவாளிகள் சொல்வார்கள். இதை எடுத்துக்காட்டத்தான் இந்த மாநாடு நடக்கின்றது. இதில் ஈடுபட்டுள்ள ஆதீனங்களைப் போற்ற வேண்டும். சமயஸ்தாபனங்கள் இத்தகைய பணியை ஏற்றுக் கொண்டிருப்பது ஜனசமூகத்திற்குத் தேவை. இன்பதுன்பங் களில் சமபுத்தி பண்ணத் தெய்வபக்தி உதவுகிறது. இதை வளர்க்கத்தான் கோயில்கள் ஏற்பட்டன. வெறும் ஏமாற்று வித்தைக்கல்ல. நமது இராஜாஜி அவர்கள் ஆலயங்களின் பிரதி நிதியை ஜனங்களின் ஒழுக்கத்தை உயர்த்தவேண்டும் என்பதைப்பற்றி யோசித்து வருகிருர் என்று அருமையாகவும் இனிமையாகவும் பேசினுர்கள்.

**பி. ஸ்ரீ ஆச்சார்யா** அவர்கள் 'கம்பரின் நகைச்சுவை' என்ற தலைப்பில் ஆரண்ணிய காண்டத்திலும் சுந்தர காண்டத் திலும் நகைச்சுவை ததும்பிக் கிடப்பதைப் பல பாடல்களால் எடுத்துக் காட்டியதோடு, இராமன் பெருமையை இராவணன் உணர மறுத்ததாலேயே அவன் அழிந்தான். என்பதையும் விளக்கிப்பேசினுர்கள்.

கே. சந்திரசேகரன் M.A.B.L. அவர்கள் 'நமது நாட்டிலேதான் இலக்கியங்கள் சமயத்தை வளர்த்தன; இலக்கிய வளர்ச்சிக்குச் சமய உணர்ச்சி தேவை என்று பல மேற்கோள்களை எடுத்து அழகுறப் பேசினுர்கள். N. சஞ்சீவி B.O.L. அவர்கள் தமிழ்த்தாய் கட்டிய தொட்டிலாகிய புறநானூற்றில் சமயக் குழந்தை தவழுகிறது; சமய உணர்ச்சி இல்லாத இடங்களே இல்லை; 18 தெய்வங்களுடைய பெருமையைப் புறநானூறு விளக்குகிற தென்று கூறினுர்கள். ஸ்ரீ சங்கரஞ் செட்டியார் வந்தனே பசாரம் கூறக் கூட்டம் இனிதே முடிந்தது.

## 28—7—52 திங்கள் 10ம்-நாள்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழா திருமுறை விழாவாக—பிரசார வாகன நான்காம் ஆண்டுவிழாப் பூர்த்தியாக நடந்தது. சைவப் பேரன்பினராகிய மதுவிலக்கு மந்திரி கனம் வி. சி. பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் தலைமை வகித்தார்கள். கபாலீஸ்வரர் சந்நிதியில் கூட்டம் நடந்தது. கற்பகாம்பிகையின் கருணையாகிய மழை எல்லாரும் திரு முறையைக் கேட்டுக்கொண்டே இருக்கும் படியான நிலைமையை ஏற்படுத்திவிட்டது. எல்லாருக்கும் பிரசார கோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நல்வரவு கூறினுர்கள். ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் பிரசார வாகன ஆண்டறிக்கையை வாசித்தளித்தார். தலைவர் அவர்கள் மதச் சார்பற்ற சர்க்கார் என்ருல் ஒரு மதத்தோடும் தொடர்பு கொள்ளப்படாது என்பது கருத்தன்று. குறிப்பிட்ட ஒரு மதத்தோடு மட்டும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்பதே கருத்து. ஆஸ்திகந்தான் உலகத்திற்கு ஆணிவேர். அதன் மேலேயே நமது இன்பவாழ்வாகிய கோட்டை எழுப்பப்பட்டிருக்கிறது. அத்தகைய ஆஸ்தீகம் வளர்ச்சியடைய இத்தகைய பிரசாரம் தேவை என்ருர்கள். பின்னர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் இயற்றிய சிவபோக சாரத்தைப்பற்றி ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை மிகவும் இனிமையாகப் பேசினுர்கள். ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் நன்றி கூறினுர்கள். தருமபுர ஆதீனத்திலிருந்து வந்த திருமுறை ஏடுகள் வெள்ளி மஞ்சத்தில் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. சுமார் 9 மணியளவில் தர்மரட்சாமணி K. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் திருமுறை விழாவைத்

தொடங்கி வைத்தார்கள். ஸ்ரீமான் அய்யர் அவர்களுக்குத் திருமுறையை ரசிப்பதில் அலாதியான பிரியம். திருமுறைப் பாராயணத்திற்குத் தருமபுர ஆதீனம் வேலாயுத ஓதுவாமூர்த்திகளும், சங்கீதபூஷணம் சுவாமிநாதனும், திருக்கடவூர் தேவஸ்தான திருமுறைப் பாராயணம் சாமிஐய்யா தேசிகர் அவர்களும், வைத்தீஸ்வரன்கோயில் திருமுறைப்பாராயணம் சொக்கலிங்கம் பிள்ளையும், தருமபுர ஆதீனத்தேவாரப்பாடசாலை இளந்தேவாரமணிகள் மூவரும் கலந்துகொண்டார்கள். சிதாபதி நாயக்கர் பிடில் ஒரு அலாதி ரம்மியமானது. எல்லாங்கூடி இரவு மணி 12½ வரையில் எல்லாரையும், ஏன் கபாலீஸ்வர கற்பகாம்பிகை உட்பட விழித்திருக்கும்படி செய்துவிட்டது. பொதுவாகத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு சென்னையில் நல்லவிழிப்பை உண்டு பண்ணியிருக்கிற தென்பதை யாரும் மறக்கமுடியாது. ஆதீனம் பலகிராமங்களில் செய்து வந்த பணியைச்சென்னையும் கிராமமாயிருந்துதானே இன்று பட்டணமாயிருக்கிற தென்ற பண்பால் அதற்கும் பங்கு கிடைக்கவேண்டுமென்ற எண்ணந் தான் ஏதோ ஒருவகையாக நடத்தியது.

இவ்வளவிற்கும் சென்னையிலுள்ள மகா ஜனங்களின் ஒத்துழைப்பே காரணமாயிருந்த தென்பதை ஆதீனமும் தமிழ் நாடும் மறக்கமுடியாது. ஆஸ்தீகம் வளர்க்க செய்தித்தாள்கள் செய்த விளம்பரம் கொஞ்சமல்ல. அவற்றிற்கும், இதில் பங்கு கொண்ட அன்பர்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சியைத்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

469

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஸூ ஆவணிமீ 1உ முதல் 31உ வரையில்)

(16—8—52 முதல் 15—9—52 வரையில்)

**1. மேஷம். அசுவதி, பரணி, கார்த்திகை ¼.**

மேஷராசிக்காரர்களுக்கு மூன்று நக்ஷத்திரம் சம்பந்தப் பட்டவர்களும் முதல் பத்து தினங்களில் நன்மை அடைவார் கள். பிரபு தரிசனம், ராஜப்பிரீதிகரம், தொழில்மூலமாக லாபம், தனது பிரதாபம் வெளியாகுதல், அரண்ய பர்வத சஞ்சாரம், சிவக்ஷேத்திரங்கள் தரிசனபலன் இவைகள் சித்திக் கும். பரணி 1, 3 பாதங்கள் உடையவர்களும் கிருத்திகை முதல்பாதம் உடையவர்களும் உஷ்ணரோகத்தாலும், சத்துருக்களாலும் பாதிக்கப்படுவார்கள். வெள்ளி சுபமாகும்.

**2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.**

மேற்படிமாதம் விருஷபராசிபலன் சுபம் தரும். தொழில் விருத்தி, கிரயவிக்ரய கௌசலம், காலிகன்று வாங்குதல், கொடுத்தல், நஷ்டதன பிராப்தி, கடன் நிவர்த்தியாகுதல், சத்துருநாசம், ரோகநாசம், மேலோர் பெரியோர் நேசம், சிவ கேசவ பக்தி, சத்கதா சிரவணம், மனஉல்லாசம், இல்லறசுகம் இவைகள் நடைபெறும். புதன், வியாழன் அசுபம். வெள்ளி சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.**

புனர்பூச நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட மிதுனராசி பலன் விபரீதத்தை விளைவிக்கும், எந்தகாரியத்திலும் ஆரம்பத்தில் ஜயம்போல் காட்டிப் பூரா அபஜயத்தைத்தரும், சத்துருக் களால் ஆபத்து, வாகன நஷ்டம், காலிகன்று நஷ்டம், சோர பயம், மானநஷ்டம், தனநஷ்டம், காரியவிக்னம் முதலியனவும் மாதத்தின் மத்தியப்பகுதியில் ராஜாங்க உதவியும், அதனல்

பின்பு பல கஷ்டங்களும் காட்டும். ரொம்ப ஜாக்கிரதை வேணும். மற்ற இருநக்ஷத்திரபலமும் மிசிரமாகும், சுபா சுபம் கலந்து நடக்கும். செவ்வாய், புதன் அசுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.**

கடகம் சம்பந்தப்பட்ட நக்ஷத்திரம் எல்லாம் மத்திய பலனையேதரும், விவசாயநஷ்டம், தொழில்குறை, அபவாதம், கீர்த்திபங்கம், மானக்குறை, சத்துருரோகபாதை, வீண் செலவு, சத்கர்மஹாநி. மனஸ்தாபங்கள் உண்டாகும். மாதக் கடைசி பாகத்தில் பத்து தினங்களில் சில அசாத்தியகாரியங் கள் சாதித்தலும், ராஜாங்கமைத்திரமும், கடன் நிவர்த்தியும், பணப்பொழக்கம் அதிகமும் உண்டாகும். புதன், சனி அசுப மாகும்.

**5. சிம்மம். மகம், பூரம், உத்திரம் ¼**

சிம்மராசி லக்கினபலன் சுபமேயாகும். மேலோர் பெரியோர் நேசம், கீர்த்திபத்திரம் கிடைத்தல், புண்ணிய க்ஷேத்திரவாசம், பிரதிஷ்டாதி பலன்கள், சுபசோபனுதிகள், கட்டிடவேலைகள், கிரயவிக்ரயங்களில் லாபமடைதல், விசே ஷங்களில் முதன்மைவகித்தல், தூரத்திலிருந்து நல்ல சமா சாரக்கேள்வி முதலிய சுபங்களே நடைபெறும். மத்திய பாகத்தில் உஷ்ணரோகபீடைகாட்டும். செவ்வாய், வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.**

கன்னியாராசி பலன் பூராவும் மூன்று நக்ஷத்திரக்காரர் களுக்கும் அதிக விரயத்தின்பேரில் சகலமும் சாதனமாகும், இல்லறசுகம், சத்கர்மானுஷ்டானம், தேவதா குருதரிசனம், பிரதிஷ்டாபலன்கள், எதிர்பாராதவைகள் எல்லாம் கைகூடு தல், ராஜாங்கமைத்திரம், அதிக உழைப்பு, அதனால் சரீரத் துக்கு ஆயாசம் தோன்றுதல், ஆத்மசமானர்களின் ஆபத்தால் கொஞ்சம் கலக்கமடைதலும், மற்ற சுபங்களும் நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

471

**7. துலாம். சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.**

துலாராசி சம்பந்தப்பட்ட விசாகம் இம்மாதம் கெட்ட பலனையேதரும். தொழில்சம்பந்தப்பட்டவர்கள் தொழிலாளிகளால் அவமதிப்படைந்து ஓடிவிடுவார்கள், தொழில்நஷ்டம், குடும்பநஷ்டம், தனநஷ்டம், ரிணரோகசத்துரு, சோரபாதைகள் அதிகமாகும். மற்ற இருநக்ஷத்திரம் சம்பந்தப்பட்டவர்களும் கவலை அடைந்துகொண்டே சுபம் அடைவார்கள். தொழில் லாபம், பெரியோர் மேலோர் சேர்க்கை, நஷ்டதனப் பிராப்தி, கடன் நிவர்த்தியாகுதல். விவசாயவிருத்தி, காலி கன்று சேர்க்கை, வாகனவிருத்தி, பிரதிஷ்டாபலன், கீர்த்திப் பத்திரம் கிடைத்தல், தெய்வசக்தி பிரகாசித்தல் முதலிய சுபங்கள் உண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

**8. விருச்சிகம். விசாகம், ¼ அனுஷம், கேட்டை.**

விருச்சிகராசி சம்பந்தப்பட்ட, அனுஷம் கேட்டைக்குப் பூர்ணசுபபலனும், விசாகத்துக்கு அல்பபலனுமாக நடைபெறும். பூர்ணபல்மாவது தூரயாத்திரை, உத்தியோகலாபம், தொழிலாளிக்கு விசேஷ நன்மை, நடுத்தரவகுப்பார்களுக்குச் சுகஜீவனம், ஸத்புத்தி உண்டாகுதல், துஷ்டநிக்கிரகமாகுதல், சத்துருமைத்திரமாகுதல், கிருஷிகோலாபங்கள், சுபசோபனுதிகள் நடைபெறும். பிரபுக்களாகில் சுபத்தில்பாதியே நடக்கும். மேற்படி விருச்சிகராசிபலன் மேற்படிமாதம் கீழ்த்தரவேலைக்காரர்களுக்கு மிகவும் நன்மையைத் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

**9. தனுசு. மூலம், பூராடம், உத்திராடம் ¼.**

மேற்படி தனுர்ராசி சம்பந்தப்பட்ட மூன்று நக்ஷத்திரங்களுக்குமே பூரா சுபபலனேயாகும். நூதனதொழில் விருத்தி, வாகன விருத்தி, கிருஷிசாதனங்கள் விருத்தி, யஜமானத் தத்துவம், வியாபாரலாபம், வெகுஜன ஆசிரயம், சேவகஜன சேர்க்கை, தைரியபுத்தி, தீர்த்த யாத்திரை, ஞானோதயம், தபோவிருத்தி, சமதாபுத்தி, நீசசண்டாள ஜனத்தால் கொண்டாடும் தன்மை இவைகள் நடைபெறும். சனி பூர்ண சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

மகரராசி மூன்று நக்ஷத்திரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கும் பீடையைத்தரும், இடம்மாறல், அகால போஜனம், மனக்கவலை, அதிக உழைப்பு, அதிகச் செலவு, மந்தப்படுதல், வியாபாரிகளாகில் நஷ்டமுண்டாகுதல், ராஜாங்கநிர்ப்பந்தம், பணத்தட்டு, கடன்வாங்குதல், இல்லறத் துன்பம் முதலிய திருப்திகரமில்லாத பலன்களே நடைபெறும். சனி, செவ்வாய் அசுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி பலன் மூன்று நக்ஷத்திரங்களுக்குமே திருப்தி அளிக்காது. மனஸ்தாபம் உண்டாகுதல், இனவருத்தம் அடைதல், குடும்பக்கலகம், தொழில் மந்தம், திருட்டுபயம், விதவாஸ்த்ரீகலகம், வேலைக்காரர்கள்தொல்லை, நீசசண்டாளர்களால் தாங்கவொண்ணுத கஷ்டம், நஷ்டமடைதல் இவைகளே நடைபெறும். ஆனல் மாதக்கடைசியில் ஒருவார காலத்தில் சில நன்மைகளும் ஒரு பெரியோரின் அனுக்கிரகமும் கொஞ்சம் ஏற்பட்டு, கஷ்டங்கள் ஒருவாறு நீங்கும். புதன், வெள்ளி சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசிக்காரர்களில் உத்திரட்டாதிக்குப் பூரண சுப பலனும், ரேவதிக்குப் பிரயாசையின்பேரில் நற்பலனும், பூரட்டாதிக்குக் கஷ்டபலனும் சம்பவிக்கும். சுபங்களாவன; வியாபாரியாகில் தொழில்மூலம் லாபமடைதல், பணப்பொழக்கம், கடன்நிவர்த்தி, நஷ்டதனப்பிராப்தி, சத்துருமைத்திரம், வியாதிசாந்தி, விவகார ஜயம் முதலிய சுபங்கள் ஏற்படும். வியாழன், புதன் சுபமாகும். மாதத்தின் நடுப்பகுதியில் ஒரு பெரியோரின் தரிசனம் கிட்டும்.

प्राज्ञः इत्यादिना विश्वादिपदानि न्यरूपयत् । अतः प्राज्ञशब्दे आनन्दमयेऽव्याकृतस्येश्वरस्यान्तर्भावं विवक्षितत्वात्तत्र सर्वेश्वरत्वादि तद्धर्मवचनमिति । इत्थमेव भगवत्पादै गौडपादीयविवरणे व्याख्यातम् ।

दृग्दृश्यविवेके तु चित्रदीपव्युत्पदितं कूटस्थं जीवकोटौ अन्तर्भाव्य चित्रत्रैविध्यप्रक्रियैवावलम्बिता इति विशेषः । तत्र मुक्त जलाशयतरङ्गबुद्बुदन्यायेन उपर्युपरि कल्पनाज्जीवस्त्रिविधः पारमार्थिको व्यावहारिकः प्रातिभासिकश्चेति । तत्रावच्छिन्नः पारमार्थिकः जीवः तदवच्छेदकस्य कल्पितत्वेन ब्रह्मणोऽभिन्नत्वात् । तमावृत्य स्थितया मायया कल्पितेऽन्तः करणे चिदाभासोऽन्तः करणतादात्म्यापत्या अहमित्यभिमन्यमानो व्यावहारिकः । तस्य मायिकत्वेऽपि यावद्व्यवहारमनुवृत्तेः । स्वप्ने तमप्यावृत्य स्थितया मायावस्थाभेदरूपया निद्रया कल्पिते स्वप्नदेहादौ अहमित्यभिमानी प्रातिभासिकः । स्वप्नप्रपञ्चेन सह तद्दृष्टस्य जीवस्यापि प्रबोधे निवृत्तेरिति । क्वचिच्चैतन्यं सप्तधा भिद्यते इत्युच्यते ।

शुद्धमीश्वरचैतन्यं जीवचैतन्यमेव च ।
प्रमाता च प्रमाणं च प्रमेयं च फलं तथा ॥
सप्तधा भिद्यते चैवं चैतन्यं व्यावहारिके ।
मायोपाधिविनिर्मुक्तं शुद्धमित्यभिधीयते ॥
मायासम्बन्धकांशोऽयं जीवो विद्यावशस्तथा ।
अन्तः करण सम्बन्धः प्रमातेत्यभिधीयते ॥
तदा तद्वृत्तिसम्बन्धः प्रमाणमिति कथ्यते ।
विषयावगतचैतन्यं प्रमेयमिति कथ्यते ॥
इष्टारिष्ट फलावाप्तौ फलचैतन्यमुच्यते । इति

இவை அனைத்தும் பிரகிருதி பெந்தத்தளவினின்ற உபாதி பேதங்களாற் பேதமன்றி அதன்மேல் வித்தியா தத்துவ சிவதத்துவ மற்றும் வியாபகமாகக் கூறினமையின் அந்த உபாதி பேதங்களும் அடங்கக் கூறியது. சிவத்திடுெ மூன்றுமுபாதியால் என்றது. இவை,

कार्योपाधिरयं जीवः करणोपाधिरीश्वरः ।

என்றது கொண்டு பொதுப்பட அடங்குமெனினுமாம். காரிய பிரமேயங்களுட் சிவரூபாதிகளும் அடங்கக்கூறும் தசாவஸ்தையின் விரிவு தோன்றச் சிவத்தினெடு............தைக் கூறிய தெனினுமாம். இம் மூன்றும் மூன்று பதங்களை யுணர்த்தும் மேல் தொம்பதந்தான ...றற்பதந்தான் அசி பதந்தானென்பது. அது ஞானசித்தியில்,

त्वं पदमात्मरूपं तु तत्पदं परमात्मनः असिपदं तयोरे
कामेवं तत्त्वमसिक्रमः ।
आसिपदं शिवरूपं द्वयोरैक्यं प्रकाशितम् ।

எனவரும். இவற்றின்மேற் குரு சுவரூபம் என்பதற்கு வந்தது, **ஒன்றாய்ச் சத்தியமாய்** என்றற் றொடக்கத்தது. அது திருமந்திரத்தில்,

இடனொரு மூன்றி லிசைந்த வொருவன்
கடனுறு மவ்வுறு வேறெனக் காணுந்
திடமது போலச் சிவபர சீவ
னுடனுறு பேதமு மொன்றென லாமே.

எனவரும். இவ்வாறு ஞானசித்தியிலும்,

जीवावस्था परावस्था शिवावस्थान वान्तकम् ।
नवतत्वं नवावस्था नवावस्थान्तगः शिवः ॥
ब्रह्मा विष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः ।
परबिन्दुः परो नादः पराशक्तिः परः शिवः ॥
नवतत्वलयस्थाने नृत्तानन्दमयो गुरुः ।
नृत्तानन्दपरा विद्या नृत्तान्तं वागगोचरम् ॥

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. பிறவும் விரித்துக் கொள்க.

26. * * *

**தேகமோடிந்திரியம்** என்பது காரியோபாதியும் காரணோபாதியுமாமாறு கூறுகின்றது. ஈண்டுக் காரியோபாதி ஏழும் வருமாறு:— திருமந்திரத்தில்,

உடலிந் தியமன மொண்புத்தி சித்தம்
அடலொன் றகந்தை யறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயன் மேலுங் கிளைத்தால்
அடைவது தானேழ் நரகத்து ளாயே.

என்பதனுல் அறிக. இனி **உயிர்தவிர்த்துச் சங்காத** மென்பதற்கு வருமாறு:— தத்துவாமிருதத்தில்,

முந்துறக் கேட்டநீயாம் பதத்தினில் முக்கியந்தான்
நந்திடு முடலமாதி நானெனத் தோன்றி மெய்போல்
வந்திடு மயக்கமாய வுடலொடிந் தியமனந்தான்
புந்திநற் பிராணுங் காரம் புகலுசங் காதமேழாம்.

எனவரும். சங்காதமாவது முன்னர்த் தனித்தனி நின்ற ஆறும் பின்னரொன்ருய்க்கூடும் கூட்டம். இதுதான் ஆன்மா என்பன் பௌத்தரிற் சௌத்திராந்திகன். இவனைத்தான் ஆலய விஞ்ஞானவாதி என்பர். அது,

ஒருவனென் ருேதப்பட்டான் உருவாதி ஐந்துங் கூடி
வருவன் என்றுரைத்தல் மற்றத் தொகை யுண்மை
வழக்கத்தாகும்.

என்னும் அவன் மத வசனத்தால் உணர்க. அங்ஙனம் வாக்கிய விருத்தியிலும்,

**एवमिन्द्रियदृङ्नाहमिन्द्रियाणीति निश्चिनु ।**
**मनो बुद्धिस्तथा प्रणो नाहमित्यवधारय ॥**
**संघातोऽपि तथा नाहमिति दृश्यं विलक्षणम् ।**

எனவரும். ஈண்டுப் பிராணனையும் கூறியத்தோடே தேகாதிகளையும் கூட்டி எண்ணியதுங் கண்டுகொள்க. ஈண்டுக்

கூறும் ஏழுபாதிகட்குமுள்ள தத்துவங்கள் தேகத்தினின்ற மாத்திரையைஞ்சு பூதமைஞ்சு இந்திரியங்களைஞ்சு ஞானேந்திரியமைஞ்சு கன்மேந்திரியமைஞ்சு அந்தக்கரணம் நான்கும் பிராணவாயு ஒன்றுமாக இருபத்தைஞ்சு தத்துவங்களாம். இவற்றின் மேலாய் நிற்கும் புருடதத்துவம். இப்புருடன் சகலனுகலின் அவித்தையுங் கன்மமுங் கூடிநின்றபோது பிரளயாகலன் என்றும் அவித்தை மாத்திரம் கூடிநின்ற போது விஞ்ஞானுகலனென்றும் பெயர்பெறுவன். அதனுல் வித்தியா தத்துவஞ் சிவதத்துவங்களையும் மாயையுள் அடக்கிப் பிறிதோராற்றல் "கர்தா மேவுபாதி யேழென்பர்" நிராமயதேவர். அது,

இந்திய மெல்லாந் தேக மெழுமன மிதனிற் புத்தி
புந்தியிற் பிராணன் மேலாம் போற்றிய பிராணன் தன்னில்
வந்தசங் காதமாயை மேலதாம் வகுத்த வேழும்
முந்திய வான்மோபாதி யேழதா மொழியுங்காலே.

எனவரும். **பரமாங் காரணத்தோடியையி** னென்றற்றொடக்கத்துக் காரணவுபாதியிவை யென்கின்றது. அது பரிபூரணசித்தியில்,

அதுவெனும் பதத்தின் முக்ய மாவகா ரணவுபாதி
யெதுதுவசம் பதத்தினீசனிலங்கு காரணன் வியாபி
பதுமுழு தினையுந் தானேபடைத்துக்காத் தழிப்பதாகும்
விதமிவை யேழொன்ருக விளம்புவ ருளம்போயற்ருேர்.

என வரும். 26

27. * * *

**உலகமெலாம்** என்பது சிவோபாதியுங் குருசுவரூபமுமாமாறு கூறுகின்றது. ஈண்டுக் கூறிய சிவோபாதி மூன்றென்றதன்றிச் சிவோபாதியேழும் பரோபாதி யேழுமாணுற்

போல வந்தச் சிவோபாதியு மேழென வருதலுமுளவென்க. அது திருமந்திரத்தில்,

சீவ பரனுடன் றெம்பதந் தற்பத
மூவை யசிபத மூவேழு பாதியோ
டாவயி னச்சொரூ பாந்தத் தடங்கவே
யோவையி னேடுத னுண்மைச் சமாதியே.

என வரும். இந்தச் சிவோபாதியான்மா பரசிவபேத சைதன்னியத்தி னயிக்கங்கூறுதலிற் பூருவோ பாதி யநுசந்தானத்தோடும் வருமவை புருஷதத்துவம்.

आत्मा कालपरं पर व्योमं परावस्थां विश्वग्रासं उपशान्तकम् ।

எனவரும். இவ்வாறு ஞானசித்தியில்,

एकैकविषय ग्राह्यावस्थः पुरुषतत्वकः ।
त्रिखण्ड जीवब्रह्मार्थमेकीभाव स्थित... ॥
... संशयतः प्राज्ञा तदात्मा परसंस्थितः ।
तत्काल परनामानि तत्तत्तरत्वस्य कारणम् ॥
तत्प्रज्ञाभाव संसिद्धं शुद्धकेवलं संस्थितम् ।
परमे व्योम्नि सिद्ध्यर्थं जीवन्मुक्ति प्रकाशकम् ॥
तत्प्रकार स्वचैतन्यं परमात्मन्यवस्थितम् ।
परावस्था प्रकाशस्तु अवस्थातीत गोचरम् ॥
आकाशशरीरं ब्रह्म तुर्यातीतं परं शिवम् ।
अणुर्महत्वं तद्व्याप्तं जीवात्मपरयोदितम् ॥
एतदर्थं तदर्थं च तत्परं परमं पदम् ।
विश्वग्रासपरं गुह्यं सर्वात्मशिवमुद्भवम् ॥
तत्सर्वं व्याप्तिसंयुक्तं तच्छून्यं व्याप्ति सम्भवम् ।
तच्छिवावस्थितं शान्तं शान्त्यतीतं परात्परम् ॥
उपशान्ति ज्ञप्तितः प्राप्तं परजीवैक्य साधनम् ।
आत्मा परशिवश्चैते त्रिपदार्थास्त्रिचेतनाः ॥

என வருமாற்ருன் உணர்க. இனி இவ்வாருக நிகழுமுபாதி யென்றற்ருெடக்கத்தது..........லக்ஷணங் கூறியது. அது திருமந்திரத்தில்,

சத்தி சிவன்பர ஞானமுஞ் சாற்றுங்கால்
உய்த்த வானந்தஞ் சிவமுய ராநந்தம்
வைத்த சொரூபத்த சத்தி வருகுரு
வுய்த்த வுடலிவை யுற்பலம் போலுமே.

... ... னின்றததுவந்
தந்திடுந் தேவா சன .....விடஞ்சத்தியாதி
வந் ... ... ... போலெலன
நந்தியெமக்கு நடுவுரைத் தானே.

உற்பல மாமண சீர்நிற மூன்று
முற்பல மாயை (வை) ... ...
... ... சேத்தியாதியிற்
சொற்பர மாமிவை தொல்லுட லாமே.

உருவிற் பலநிற மொண்மணஞ் சோபை
தரநிற்ப போலுயிர் தற்பரந் தன்னின்
மருவச் சிவமெனு மாமுப் பதத்தின்
சொரூபத்தன் சத்தியாதி தோன்றநின் ருனே.

சொரூப முருவங் குணந்தொல் விபூதி
யரியன வுற்பலத் தாமாறு போல
மருவிய சத்தியாதி நான்கு மதித்த
சொரூபத் திருநந்தி சொல்லிறந் தானே.

சத்திய ஞானமே ஞான மனந்தான்
மெய்த்தகு ஞேய மிகபுறவா நந்தம்
முற்றிய ஞாதுரு மூன்றினுந் தொன்ருன்
சுத்த குரவன் சொரூபத் துளானே.

எனவும் பிறவும் வருமாற்ருன் உணர்க. இனி ஆறு குறி யாவது,

त्रिकालाबाध्यसत्वं अपरिमितार्थाश्रयित्वम् विभुत्वम् अद्वितीयत्वं नित्यनवीनत्वं नित्यनिपुणत्वम् ।

என்னுமிவை. எட்டியல்பாவது கேள்வியிறந்தது, காலமிறந்தது, தெரிசனமிறந்தது, வீரமிறந்தது, எல்லையிலாநந்தம் எல்லையில் ஞானம், தேசமிறந்தது, திசையிறந்தது எனுமிவை. அது தத்துவாமிருதத்தில்,

வடிவி னுண்மையு மாப்பொரு ளுடைமையு மலாவு
முடியு மாமிரு மையுமுற மொழிதரு விரகும்
படியிலா தெழு படிமையும் புதுமையு மாத
லுடைய வாகிய வுயர்குறி யாறவை யுடைத்தாய்.

இறந்த கேள்வியா யிறந்தநாட் டெரிசன மதுவா
யிறந்த வீரமா யெல்லையி லானந்த ஞானஞ்
சிறந்த காலதே சந்திசை யிறந்திடத் திகழ்ந்து
நிறைந்த வெட்டியில் புடைத்து நீளவாக்கிய மினுங்கேள்.

என வரும். 27

28. * * *

இது பெறற்கம் மூன்று பாதிகளு நீங்க என்பது முத்தியினிகழுந் தேசாவத்தையுமாமாறு கூறுகின்றது. அது வருமாறு. ஞானசித்தியில்,

आत्मजाग्रं परजाग्रं शिवजाग्रं त्रिजाग्रकम् ।
आत्मस्वप्नं परस्वप्नं शिवस्वप्नं त्रिस्वप्नकम् ॥
आत्मसुप्तिः परसुप्तिः शिवसुप्तिस्त्रिसुप्तिकम् ।
आत्मतुर्यं परतुर्यं शिवतुर्यं त्रितुर्यकम् ॥
एवं द्वादशधा भिन्नं दशावस्थाः प्रकल्पिताः ।

எனவும்,

480

जाग्रजाग्रं जाग्रस्वप्नं जाग्रत्सुषुप्तिस्तृतीयकम् ।
जाग्रं तुर्यं चतुर्थं च तत्कालपरपञ्चमम् ॥
परंव्योमं तु षष्ठं तु परावस्था तु सप्तमम् ।
विश्वग्रासाष्टमं चैव उपशान्तो नवस्तथा ॥
शिवभ्रष्टा दशं चैव वाक्यावस्था दशेरिता ।

எனவும் வருமாற்ருன் உணர்க 28

29. * * *

**சுழூத்தியந்தம்** என்பது முற்கூறிய பத்தவத்தைகளு ளந்தமான அவத்தை சொரூபாவத்தைக்காதியாகலி னபிமான தேவதையின்மையின் மற்றை யொன்பது அவத்தைகட்கு மபிமானிக ளிவர்களென்கிறது. அது வருமாறு. திருமந்திரத்தில்,

தொம்பதத்தே விச்சுவன் றைசதன் பிராஞ்ஞன்
னற்பத விராட்டி ரண்ணிய கருப்பனவ் வியாகிருதன்
சொற்பத மூன்றிற் சொலிதன் பிரசாபத்தியன்
னற்சிவோப சாந்தஞ பொருத பிமானியே.

என வரும். ஈண்டு தொற்பதம் என்று பாடமாயின் மகாரம் றகாரமாகத் திரியுமிலக்கணமின்மையின் வழுவாம். மூன்ரு மெழுத்தொன்றே தொடையாய்க் கூறுதலிற்ருெடைவழு வின்று. முழுதும் வடமொழிப் பதமாய் புணர்த்தது பன்னிரண்டெழுத்தினடங்க. அன்றி மனம் விரிந்து குவிந்துரை மாண்டிட முத்தியே" என்ருற்போலவு மொரோ வழிக் கூறுதலிற் றமிழ்படுத்திக் கூறுவழி விரியினும் வழு வின்று. ஈண்டுக் கூறும் சுத்தாவத்தைகளுள், சீவசாக்கிரம் சீவசுவப்பனம், சீவசுழுத்தி என்று மூன்றிற்கும் முறை விசுவன் தைசசன் பிராஞ்ஞன் எனவும், பரசாக்கிரம் பர சுவப்பனம் பரசுழுத்தி யென்னு மூன்றிற்கும் விராட்புருஷன் இரண்ணிய கருப்பன், அவ்வியாகிருதன் எனவும் வந்தது. மாயாவாதத்தில் கூறுமாறு:— அது வேதாந்தப்பிரகரணத்தில்,

 481

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்தர ஆரம்பப்பாடசாலை

## விஸ்தரிப்புக் கட்டிடத் திறப்புவிழா.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் இளைஞர்களுக்கு எழுத்தறிவிக்கும் பணியில் தொடங்கப்பெற்ற இப்பள்ளி, மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப் பாங்கிற்கு ஏற்ப ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வருவதை அன்பர்கள் அவ்வப்போது நிகழும் விழாவாயிலாக அறிந்து மகிழ்வர். 1—6—52-ல் எட்டாம் உயர் வகுப்புத் தொடக்கவிழா நடைபெற்றது. பள்ளிக்கூடம் திறம்பட நடைபெற்று வருவதை அறிந்த ஊர்மக்களும் சுற்றுப்புறத்திலுள்ள மக்களும் தத்தம் சிறுவர்களை இப்பள்ளிக்கே அனுப்பி வைத்தார்கள். மாணவர் எண்ணிக்கை அதிகம் அதிகமாக, பாடசாலைக் கட்டிடமும் வளர்ச்சிபெற வேண்டியதாயிற்று. அவ்வப்போது வேண்டிய தேவைகளை யெல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றி ஊக்கிவரும் மகாசந்நிதானம் அவர்கள் சுருங்கிய நாளில் தேவையான கட்டிடத்தைக் கட்டி முடித்துதவினார்கள். கட்டிடத் திறப்புவிழா 30—7—52 புதன்கிழமை மாயூரம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் திரு. N. ராகவா M. A., அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஆதீனத் தேவாரபாடசாலை, ஆதீன வேத சிவாகம பாடசாலை, ஆதீனப் பல்கலைக்கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும், மற்றப் பெருமக்கள் பலரும் கூடியிருந்தார்கள். கடவுள் வாழ்த்துடன் மாலை 5 மணிக்குக் கூட்டம் தொடங்கியது. பாடசாலைத் தலைமையாசிரியர் பிர்மஸ்ரீ வெங்கட்டராமஐயர் அவர்கள் விழாத்தலைவரின் அருங்கலைத் திறனையும், மகாசந்நிதானம் அவர்கள் கல்விப் பணிக்குச் செய்துதவும் ஆதரவுகளையும் எடுத்துச் சொல்லித் தலைவரை வரவேற்று மலர்மாலையும் சூட்டினார்கள்.

பாடசாலை மாணவர்களும் மாணவிகளும் கும்மி, கோலாட்டம், நடனம் முதலிய விளையாட்டுகளை நிகழ்த்தினார்கள். பாலர்கள் பாடல்கள் பாடி மகிழ்வித்தார்கள். பிறகு தலைவர் அவர்கள் ஆங்கிலத்தில் அருமையாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

அதில் மாணவர்களுக்கு அவசியம் வேண்டுவதான கருத்துக்கள் அனைத்தும் அடங்கியிருந்தன. ஆதலின் ஆங்கில ஆசிரியர் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள் அச்சொற்பொழிவைத் தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னார்கள். அடுத்துப் புகைப்படம் எடுக்கப் பெற்றது. பிறகு ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், மாயூரம் முனிசிபல் சேர்மன் பிர்மஸ்ரீ பொன்னுசாமி ஐயர் அவர்களும் ஆதீனத்தில்நடைபெற்றுவரும் கல்விப்பணிகளைப் பாராட்டிப் பேசியதோடு, இவ்வாறே ஆண்டுதோறும் பாடசாலை வளர்ச்சி பெற்று ஓர் உயர்நிலைப்பள்ளியாக - உயர்தரக்கலாசாலையாக ஆகி நற்பயன் அளிக்க ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திட்டம் இட்டிருப்பதைக் குறித்துத் தமது மகிழ்ச்சியோடு கூடிய நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள். கடைசியாகப் பாடசாலை முன்னேற்றத்தில் பங்கு கொண்டு உழைத்துவரும் பாடசாலைத் தலைவர் பிர்மஸ்ரீ ஐயரவர்கள், மகாசந்நிதானம் அவர்களுக்கும், விழாத்தலைவர் அவர்களுக்கும், பேச்சாளர்கட்கும் ஏனையோர்க்கும் பாடசாலையின் சார்பில் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். அனைவருக்கும் இனிப்பு வழங்கப் பெற்றது.

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

## திருக்கடவூரில் பிரசங்கம்.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேஸ்வர சுவாமி தேவஸ்தானம் பிரசார மண்டபத்தில் ஆடிப் பூரத் திருநாளை முன்னிட்டு 18—7—52 மாலை நாகை நேஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் வித்வான் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் 'அல்லும்பகலும் திருவிளக்கின் அணி விளைத்தார்' என்பதுபற்றியும், 20—7—52 மாலை தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்வான் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'தாளின் கருத்து' என்பது பற்றியும்சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—8—1952.